Registered as a news paper.

பக்கங்கள்:- பன்னிரண்டு+II

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field.
உள்நாட்டு, வெளிநாட்டு விமான டிக்கெட்டுக்களுக்கும் பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்
இல.32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்)
021 222 3916, 0777 801038

மலர்:04 | திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஐப்பசி- 12 | ஹிஜ்ரி 1428 ரம்ழான் 25 | (29.10.2005) | சனிக்கிழமை | இதழ்:29



படைமுகாம் முன் நீதி கேட்கும் பொதுமக்கள்



வீதி மறியலில் ஈடுபட்ட இளைஞர்கள்



சம்பவ இடத்தில் பொலிஸார்

# புத்தூரில் படையினர் வெறியாட்டம்; துப்பாக்கிச்சூட்டில் இளைஞன் பலி!

## ஆர்ப்பாட்டம் செய்த பொதுமக்களில் 10 பேருக்கு காயம்

யாழ்ப்பாணம்

புத்தூர் பகுதியில் நேற்று அதிகாலை வீடொன்றினுள் புகுந்து இளம் பெண் ஒருவரை படையினர் மூவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயன்ற சம்பவத்தையடுத்து- நேற்றுக்காலை இராணுவ முகாமுக்கு முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பொதுமக்கள் மீது இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச்சூடு மற்றும் தடியடிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்ததுடன் சுமார் 10 பேர்வரை படுகாயமடைந்தனர்.

இச்சம்பவத்தால் நேற்று முழுநாளும் புத்தூர் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியதுடன் அந்தப் பகுதி மக்கள் அச்சம் காரணமாக வீடுகளை விட்டு வெளியேறினர்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - (12 ஆம் பக்கம் பார்க்க)

# படையினரின் மிலேச்சத்தனமான தாக்குதல்!

## தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக்கழகம் கண்டனம்!

யாழ்ப்பாணம்

புத்தூர் பகுதியில் பொதுமக்கள் மீது படையினர் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலைக் கண்டித்துள்ள தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் - போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக தமிழ்த் தேசிய விழிப்புணர் வுக்கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

...யும் அடாவடித்தனங்கள், அராஜகங்களையெல்லாம் தமிழ்மக்கள் கைகட்டிப் பார்த்துக்கொண்டிருப்பார்கள் என்று கருதுகின்றதாகவே எண்ணத் தோன்றுகின்றது.

## பூமிக்கு அருகில் வரும் செவ்வாய்க் கிரகம்!

கொழும்பு

பூமிக்கு அருகில் அமைந்துள்ள செவ்வாய்க் கோள் இன்று பூமிக்கு சமீபமாக வரவுள்ளது

இதனை இலங்கை மக்கள் வெற்றுக் கண்ணால் பார்க்கமுடியும் என ஆதர்சி கிளார்க் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இன்றிரவு 7 மணியளவில் கீழ்வானில்

யாழ்ப்பாணம்

புத்தூர் பகுதியில் பொதுமக்கள் மீது படையினர் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குலைக் கண்டித்துள்ள தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் -

குடாநாட்டு மக்களின் பாதுகாப்பு இன்று கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளதைப் புரிந்துகொண்டு போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக்கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

புத்தூரில் படையினர் நடந்துகொண்ட முறையைப் பார்க்கும்போது - அவர்கள் செய்யும் அடாவடித்தனங்கள், அராஜகங்களையெல்லாம் தமிழ்மக்கள் கைகட்டிப் பார்த்துக்கொண்டிருப்பார்கள் என்று கருதுகின்றதாகவே எண்ணத் தோன்றுகின்றது.

கடந்த காலங்களைப் போன்று இனியும் எமது மக்கள் ஆயுதங்களைக் கண்டு அஞ்சி ஓடத் தயாரில்லை. ஏனெனில், (12 ஆம் பக்கம் பார்க்க)

வுள்ளது

இதனை இலங்கை மக்கள் வெற்றுக் கண்ணால் பார்க்கமுடியும் என ஆதர்சி கிளார்க் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இன்றிரவு 7 மணியளவில் கீழ்வானில் தென்பகுதியிலிருந்து 15 பாகைக்கு மேற்குப் பகுதியில் செம்மஞ்சள் நிறத்தில் இந்தக் கோளை இலங்கை மக்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று நண்பகல் வரை தடைப்பட்ட ஓமந்தை ஊடான போக்குவரத்து!



வவுனியா

வவுனியாவில் இடம்பெற்ற தமிழ் தேசிய எழுச்சிமாநாட்டில் கலந்துகொள்வதற்காக - வடமராட்சி கிழக்கிலிருந்து சென்ற இளைஞர்களை ஓமந்தை சோதனைச் சாவடியில் இராணுவத்தினர் தடுத்து நிறுத்தியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுக்காலை வீதி மறியல் போராட்டம் இடம்பெற்றது.

ஓமந்தைக்கு வடக்கேயுள்ள ஏகாம்பரம் வீதியில் நேற்று மாலை தொடக்கம் இந்த வீதி மறிப்புப் போராட்டம் இடம்பெற்றது.

வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள்மீது கலகம் அடக்கும் பொலிஸார் நேற்றுக்காலை 9.30 மணியளவில் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசியதுடன், துப்பாக்கிப்பிரயோகம் செய்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயன்றனர். எனினும் நண்பகல் வரை இந்தப் போராட்டம் தொடர்ந்தது. இதேவேளை, பொதுமக்கள் தரப்பில் இருந்து பொலிஸார் மற்றும் பொலிஸாரின் வாகனங்கள் மீது கற்கள் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதனால் ஓமந்தை சோதனைச் சாவடி ஊடான போக்குவரத்துத் தடைப்பட்டது. மீண்டும் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னரே போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது.

# பொதுமக்கள் மீதான கெடுபிடிகளை நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்

## கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் தமிழ்ச்செல்வன்



கிளிநொச்சி

பொதுமக்கள் நடத்தும் போராட்டங்களில் குழப்பம் விளைவித்து படையினர் ஆத்திரமூட்டும் சம்பவங்களில் ஈடுபடுவது அதிகரித்துள்ளது. பொதுமக்களுக்கு எதிரான படையினரின் கெடுபிடிகள் அதிகரித்துவரும் நிலையில் போர்நிறுத் தக் கண்காணிப்புக்குழு தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்டிடம் கேட்டுக் கொண்டார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)


**Tilko Holidays [Pvt] Ltd.**

TILKO Holidays

*Jaffna City Hotel*

**70/6 KKS Road. Jaffna.**

TP: 021 222 5969 , Fax: 021 222 7291
E-mail: tilkoholidays@yahoo.com.

குளிரூட்டப்பட்ட அறைகள், பல் அலைவரிசை தொலைக்காட்சி, சுடுநீர் வசதி மற்றும் போக்குவரத்து, தொலைபேசி, இணைய (Internet) வசதிகள். வெளிப்புற கொண்டாட்டங்களுக்கான பூந்தோட்டம், வாகன தரிப்பிட வசதிகளுடன்.

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ்.மாவட்ட செயலகம் திறப்பு




யாழ்ப்பாணம் —

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் யாழ்.மாவட்டத்திற்கான புதிய செயலகத்தை நேற்று நண்பகல் 12 மணிக்கு அகதிகள் புனர்வாழ்வுக்கழகத் தலைவர் நல்லதம்பி திறந்துவைத்தார்.

அகவணக்கத்துடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து பெயர்ப்பலகையை நிகொட் பிரதித் திட்டப் பணிப்பாளர் என்.நவரட்ணராஜா மற்றும் யாழ். மாவட்ட நியாப் பிரதித் திட்டப் பணிப்பாளர் எஸ்.பாலகிருஷ்ணன் ஆகியோரால் திரைநீக்கம் செய்யப் பட்டது.

தொடர்ந்து யாழ்.மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் வைத்திய கலாநிதி வி.தியாகராஜாவின் தலைமையில் நிகழ்வு ஆரம்பமானது.

வரவேற்புரையை தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்டப் பணிப்பாளர் எஸ்.ஜெயராஜும், ஆசியுரைகளை அரச அரசார்பற்ற நிறுவனப் பிரதிநிதி களும் நிகழ்த்தினர்.

பின்னர் கடந்த வருடம் நிகொட் திட்டத்தில் சிறப்பாக சேவையாற்றிய நான்கு பணியாளர்கள் தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்டப் பணிப்பாளரால் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

யாழ்.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்ட இணைப்பாளர் எம். கதிர்காமத்தம்பியின் நன்றியுரையு டன் இந்த நிகழ்வு நிறைவுபெற்றது.

இதுவரைகாலமும் 82/1, கே.கே.எஸ்.வீதி, கொக்கு விலில் இயங்கி வந்த இந்த செயலகம் தற்போது இல 141, கோவில் வீதியில் திறக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# தரம் ஒன்று மாணவர் அனுமதிக்கு வங்கிக்கணக்கு மூலம் நன்கொடை

## யாழ்.நகரில் புதுவித தந்திரம்

யாழ்ப்பாணம் —

யாழ்.குடாநாட்டில் உள்ள முன்னணிப் பாடசாலைகள் சிலவற்றில் 2006 ஆம் ஆண்டு தரம் 1 இல் கல்வி கற்பதற்கு சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள அதே வேளை, மாணவர் ஒருவருக்கு நன்கொடை என்ற பெயரில் 25 ஆயிரம் ரூபா அறவிடப்படுவதாக பெற்றோர் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் உள்ள முன்னணி பாடசாலைகளில் தரம் 1 இல் மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கு பரீட்சைகள் நடைபெற்று சித்தியடைந்த மாணவர்களின் பெயர் விபரங்களை வெளியிட்டுள்ளனர்.

இந்த பெயர் விபரங்களில் மிகக் குறைந்த எண்ணிக்கையான மாணவர்களின் பெயர் விபரங்களே வெளியிடப்பட்டுள்ளதாகவும் - சித்தியடையாதோர் பட்டியலில் இடம்பெற்றுள்ள மாணவர்களை நன்கொடை என்ற பெயரில் தாம் தரும் வங்கிக் கணக்கின் இலக்கத்துக்கு குறித்த தொகைப் பணத்தைச் செலுத்துவதன்மூலம் பாடசாலையில் அனுமதி கிடைக்கும் என்று கூறப்படுவதாகவும் பெற்றோர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகளில் பாடசாலைகளுடன் தொடர்புடைய சில முகவர்களும் செயற்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் வறுமை நிலையிலுள்ள மாணவர்கள் பாதிக்கப்படுவதாக பெற்றோர் கவலை தெரிவித்தனர்.

இவ்வாறான சம்பவங்களால் பாதிக்கப்பட்ட மாணவர்கள், பெற்றோர்கள் - யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளருடனோ யாழ்.மனித உரிமை ஆணைக்குழு அதிகாரியுடனோ தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம் —

நூலக விழிப்புணர்வு நிறுவகத்தின் ஏற்பாட்டில் இன்று பி.ப 3.30 மணியளவில் யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நூல் அறிமுக நிகழ்வு நடைபெறவுள்ளது.

கவிஞர் சோ.பத்மநாதன் ‘குலாத்தி’ என்ற மராத்திய நூலை அறிமுகம் செய்து உரையாற்றுவர்.

ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

## கருத்துரை

யாழ்ப்பாணம் —

தமிழர் காண்பியக் கலைகளில் ‘நடனமும் பால்நிலை இடைவெளியும்’ என்ற தலைப்பில் பேராசிரியர் பொ.இரகுபதியின் கருத்துரை நிகழ்வு இன்று மாலை 4 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம் —

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பு என்ற அரச சார்பற்ற நிறுவனத்தின் அனுசரணையுடன் சர்வதேச லயன்ஸ் கழக யாழ். பிரிவினர் மருத்துவ முகாம் ஒன்றை நாளை காலை 10 மணி முதல் பி.ப 2 மணி வரை கொக்குவில் ஞான பண்டிதர் மகா வித்தியாலயத்தில் நடத்தவுள்ளனர். இதில் அனைவரையும் கலந்து பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## சிறுவர்-முதியோர் தின விழா

யாழ்ப்பாணம் —

கரவெட்டி பிரதேச செயலக சிறுவர் - முதியோர் தின விழா, இன்று காலை 9.30 மணியளவில் கரவெட்டி பிரதேசசபை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பருத்தித்துறை மாவட்ட நீதிவான் கே.அரியநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

## வருடாந்த பரிசளிப்பு விழா

கோண்டாவில் —

கோண்டாவில் சி.சி.த.க பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் இ.அருணாசலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரமும், சிறப்பு விருந்தினராக நல்லூர் சமுர்த்தி மகாசங்க முகாமைப் பணிப்பாளர் இ.ஜெயதாஸும் கலந்துகொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்று, வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை விருந்தினர்கள் வழங்கி கௌரவிக்கவுள்ளனர். (82)

## உரத்தின் விலை மாற்றம்

யாழ்ப்பாணம் —

சி.ஐ.சி நிறுவனத்தின் வி-01 உரத்துக்கான விலையை நவம்பர் முதலாம் திகதியிலிருந்து மாற்றம் செய்திருப்பதாக நிதித்துறை விலைக் கட்டுப்பாட்டுப் பகுதி அறிவித்துள்ளது.

இதன்படி 50 கிலோ எடையுள்ள வி-01 உரத்தின் ஆகக்கூடிய சில்லறை விலை 1740 ரூபாவாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த மாற்றத்தின்படி 1 ஆம் திகதியிலிருந்து விற்பனை செய்யுமாறு வாணிப உரிமையாளர்களை விலைக் கட்டுப்பாட்டுப் பகுதி கேட்டுள்ளது.

## புதிய கட்டட திறப்பும் பரிசளிப்பு விழாவும்

நெல்லியடி —

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் புதிய கட்டடத் திறப்பு விழாவும் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் வடக்கு - கிழக்கு மாகாண கல்வியமைச்சு பாடசாலை வேலைப்பகுதி பணிப்பாளர் ஆண்டியப்புவும், வடமராட்சி கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசாவும் கலந்துகொண்டு கட்டடங்களைத் திறந்து வைக்கவுள்ளனர்.

பரிசில்களை திருமதி ஆண்டியப்புவும், திருமதி செல்வராசாவும் வழங்கி கௌரவிப்பர். (13)

## தலைமைத்துவ பயிற்சி

யாழ்ப்பாணம் —

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பு என்ற அரசசார்பற்ற நிறுவனத்தின் அனுசரணையுடன் சர்வதேச லயன்ஸ் கழக யாழ்.பிரிவினர் யாழ்.அலுவலகத்தில் தலைமைத்துவப் பயிற்சி ஒன்றை-அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பு யாழ். அலுவலகத்தில் இன்று காலை 10 மணிக்கு நடத்தவுள்ளனர்.

இதில் யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து தெரிவு செய்யப்பட்ட 80 இளையோர்கள் பயன்பெறவுள்ளனர்.

## வீதி விபத்தில் இளைஞன் காயம்

யாழ்ப்பாணம் —

இராச வீதியில் நேற்றுமாலை இடம்பெற்ற வீதி விபத்தில் இளைஞர் ஒருவர் தலையில் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் புத்தூர் கிழக்கைச் சேர்ந்த பஞ்சலிங்கம் அரவிந்தன் என்பவரே காயமடைந்தவராவார்.

லான்ட்மாஸ்ரரும் - மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதிக்கொண்டதிலேயே இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பனை வளத்தை மீட்டெடுக்கும் புனித பணியில் ஒன்றிணைவோம்

## பனை அபிவிருத்திச்சபை ஆலோசகர் தங்கவேல்

யாழ்ப்பாணம் —

அழிந்துசெல்லும் எமது இயற்கை செல்வத்தை மீள் நடுகை செய்வதன் மூலம் மீட்டெடுக்கும் புனித பணியில் அனைவரும் இணைந்து செயற்பட முன்வருமாறு பனை அபிவிருத்திச் சபை ஆலோசகர் வி.ஜி.தங்கவேல் அழைப்பு விடுத்தார்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் 10 லட்சம் பனைவிதை நடுகைத் திட்டம் குறித்து கருத்து வெளியிட்ட அவர் -

பனை அபிவிருத்தி சபையும் ஐக்கிய நாடுகள் அலுவலகை திட்ட சேவைகள் நிறுவனமும் இணைந்து மேற்கொள்ளும் பாரிய 10 லட்சம் பனம் விதை நடுகைத் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளோம்.

கடந்த காலங்களில் குடாநாட்டில் ஏற்பட்ட போர்க்கால சூழலில் அழிக்கப்பட்ட பல லட்சக்கணக்கான பனை மரங்கள், களவாக வெட்டப்பட்ட பனை மரங்களின் இழப்பையும் ஈடு செய்யும் வகையில் இந்த மீள்நடுகைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தினால் சூழலைப் பாதுகாத்துக்கொள்ள முடிகிறது.

முன்னோர் பனைமரங்களைத் தொடர்ச்சியாக பாதுகாத்து வளர்த்துள்ளார்கள். இன்று அந்த வளங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான செயற்திட்டங்களை உருவாக்கினால் பல நன்மைகளை அடையக்கூடியதாக இருக்கும்.

நாம் பனம் விதைகளை கொள்வனவு செய்து பிரதேச செயலகங்களூடாக கிராமசேவை உத்தியோகத்தர்கள் வழிகாட்டல் மூலமும், சனசமூக நிலையங்கள் ஊடாகவும் மற்றும் கிராம அபிவிருத்தி சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

கடலோரப் பகுதிகளில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பனம் விதைகளை நடுவதற்குத் திட்டமிட்டுள்ளோம்.

சகல பிரதேசங்களிலும் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் முன்வந்துள்ளோம். எனவே, எந்தப் பிரதேசம் என்றாலும் பனை விதைகளை நாட்டுவதற்கு குழுக்கள் அமைத்து அல்லது நிறுவனங்கள் ஊடாக நாட்டலாம். அல்லது நாம் ஒரு குழுவை அமைத்து அதனை நாட்ட முடிவுசெய்துள்ளோம்.

எனவே, தரமான பனை விதை உள்ளவர்கள் அல்லது அதனை வாங்க விரும்புபவர்கள் பனை அபிவிருத்தி சபையுடன் தொடர்புகொண்டு இந்தத் திட்டத்துக்கு உதவவேண்டுமென அழைப்பு விடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.


நிறைஞ்சனாஸ் சங்கானை

சரத்குமார், நமீதா, வடிவேல் நடித்த

சாணக்கியா

காட்சிகள் 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்

இன்று மட்டும் -சூர்யா, அஸின், நயன்தாரா, பிரகாஸ்ராஜ் நடித்த

கஜினி



நாளை முதல் விக்ரம், அஸின், வடிவேல் நடித்த

மஜா

காட்சிகள்:-10.30,2.30, 6.30, மட்டும் (ப.நேரம்)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

ஆர்ஜா, சோனியா அகர்வால் மற்றும் பலர் நடித்த

ஒரு கல்லூரியின் கதை

தீபாவளி வெளியீடாக

தனுஷ், பிரியாமணி நடித்த

அது ஒரு கனாக்காலம்

காட்சிகள்;-10.30, 2.30,6.30, 9.30 (புதிய நேரம்)

சுன்னாகம் நாகம்ஸ்

மூன்றாவது ஜனத்திரள் வாரமாக ஜெயம் ரவி, ஸ்ரேயா, வடிவேல், கலாபவன்மணி நடித்த

மழை



அடுத்த வெளியீடு அர்ஜுன், நமீதா நடித்த

ஆணை

காட்சிகள்:-11.00,3.00,7.00 (பழைய நேரம்)

மனோகரா யாழ்ப்பாணம்

பார்த்தீபன் நடித்த

குண்டக்க மண்டக்க...

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

30 முதல் முதன்முறையாக



சிவகாசி விசேட காட்சி காலை 8.30 மணிக்கு

யாழ்.மாவட்டத்தில் DIGITAL dts SOUND ஒலிநயத்துடன் இளைய தளபதி விஜய் வெடிக்கும்

சிவகாசி



## சிறு விளம்பரம்

### அக்குபஞ்சர் வைத்தியம்

மூட்டுவாதம், வாதம், சலரோகம், உயர்ரத்த அழுத்தம், ஒற்றை தலைவலி, கைகால் உளைவுகள், உடல் பருமன் கூட்டுதல் குறைத்தல் போன்ற எந்த வகை நோயிற்கும் மருந்து மாத்திரைகள், பத்தியங்கள் இன்றி நிரந்தரத் தீர்வு பெற நாடவேண்டிய இடம் - ஷென்மென் அக்குபன்சர் வைத்தியசாலை, சிவராஜா அலென்யூ, தபால்பெட்டி சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (கனி கிறீம் ஹவுஸ் முன்பாக.) (2098)

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

கோப்பாய் தெற்கு இருபாலைச் சந்திக்கு அண்மையில் பழைய வீதியில் கிணறு (நன்னீர்) உட்பட 4 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

வாங்க விரும்புவோர் பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். நாதன் லட்சுமி பவான் ஹோட்டல், இருபாலைச் சந்தி. (2101)

புத்தம் புதிய DAIDO BRAND NEW C-F.100-9 CRUSSER



0112 341580, 0112 341581

பனை அபிவிருத்திச் சபை

தரமான பனம் விதை கொள்வனவு நடைபெறுகின்றது.

உடன் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:-

பனை அபிவிருத்திச் சபை
தேசிய வீடமைப்புச் செயலகம்
கண்டி வீதி
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 021-2222034
021-2263818

(சி-4769)

வாசிப்பு மாதம்

“வாசியுங்கள் அகவிழி திறக்கும்”

வாசிப்போம் வாசித்ததை யோசிப்போம்

அகவிழி

தொடர்புகளுக்கு: No.03 Torrington Avenue, Colombo - 7.

காசோலை எனின் அகவிழி என்ற பெயருக்கும், காசுக் கட்டளை எனில் கவலொக்ரவுனில் (Havelock) மாற்றக் கூடியதாக அனுப்பவும்.

T.P. 011- 2506272, E-Mail:ahavili@viluthu.org

(C/4683)

## புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச மக்களின்
# வாக்குரிமையைப் பாதுகாப்பது குறித்து வெளிநாட்டுத் தூதுவர்களுடன் சந்திப்பு!

கொழும்பு —

ஜனாதிபதித் தேர்தலின் போது - புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மக்களின் வாக்குரிமையைப் பாதுகாப்பது தொடர்பாக, சிறுபான்மை அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் வெளிநாட்டுத்தூதுவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச மக்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதில் இடையூறுகளை ஏற்படுத்த சில சக்திகள் முயல்வதாகக் கிடைக்கப் பெற்ற தகவல்களையடுத்தே நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்யும் சிறுபான்மையினக் கட்சிகள் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளன.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாழும் மக்கள் வாக்களிப்பதில் இடையூறுகளை ஏற்படுத்துவதற்காக பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றிருப்பதாகக் குற்றம் சாட்டியுள்ள சிறுபான்மையினக் கட்சிகள், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச மக்களுக்கென ஏற்படுத்தப்படவுள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கும் சில குழுக்களைக் கொண்டு குழப்பங்களை ஏற்படுத்த இந்தப் பேச்சுக்களின்போது திட்டங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் அடிப்படை உரிமையான வாக்களிக்கும் உரிமைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல்கள் குறித்து, இந்த நாட்டிலிருக்கும் அனைத்துத் தூதுவர்களையும் சந்தித்து விளக்கமளிக்கவுள்ளதாகவும் சிறுபான்மையினக் கட்சிவட்டாரங்கள் தெரிவித்தன.

# இலங்கையிலும் பறவை காய்ச்சல்; எச்சரிக்கிறார் சுகாதார அமைச்சர்!

கொழும்பு —

பருவ காலத்தை ஒட்டி வேறு நாடுகளிலிருந்து வரும் பறவைகளால், இலங்கையில் பறவைக் காய்ச்சல் நோய் பரவுவதற்கான சாத்தியங்கள் உள்ளதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

எனினும், இந்தப் பறவைக் காய்ச்சல் பரவுவதைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பருவகாலத்தை ஒட்டி ஒக்ரோபரிலிருந்து, மார்ச் வரை பெருமளவான வேற்று நாட்டுப் பறவைகள் இலங்கையில் தமது காலத்தைக் கழிக்கின்றன. இதனால், திடீரென பறவைக் காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. எனினும் இவ்வாறான ஒரு நிலை வந்தால், அதனை எதிர்கொள்ளத் தயாராகவே உள்ளோம்.

இதுவரை வளர்ப்புப் பிராணிகளிலோ, அல்லது வேறெந்த வடிவத்திலேயோ பறவைக் காய்ச்சல் பரவியதற்கான சான்றுகள் இல்லையெனவும் அவர் தெரிவித்தார். (தே)

# வடக்கு - கிழக்கு பகுதிகளில் தேர்தலைக் குழப்ப அரசு சதி!

கொழும்பு —

வடக்கு-கிழக்கில் தேர்தலைக் குழப்புவதற்கான சதி தொடர்பான குற்றச்சாட்டுக்கள் ஐ.தே.கவுக்குக் கிடைத்திருப்பதுடன், அதனைத் தொடர்புடைய அதிகாரிகளுக்கும் அறிவிக்கும்படி கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டார்.

நவம்பர் 15 இல் இருந்து இரண்டு நாட்களுக்கு கருணா குழுவின் 25 பேரை வவுனியா முகாமில் வைத்திருக்குமாறு அதன் பொறுப்பதிகாரிக்கு கொழும்பிலிருந்து பொலிஸ் தலைமை அதிகாரி உத்தரவிட்டிருப்பதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தமிழ் வாக்காளர்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து சோதனைச் சாவடிகளைக் கடந்து வாக்களிப்பதைத் தடுப்பதற்காகவே இது மேற்கொள்ளப்பட்டதாக நம்பப்படுகின்றது.

இது ஏன் முக்கியமானது எனில், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து அளிக்கப்படுகின்ற ஏறத்தாழ 250,000 வாக்குகளும் தேர்தல் வெற்றிக்கு முக்கியமானதாகும்.

எனவே, ஈ.பி.டி.பிக்கு ஆதரவான கருணாகுழு - அந்தப் பிரதேசங்களில் குழப்பத்தை ஏற்படுத்தினால் வாக்காளர்கள் வாக்களிக்க வரமாட்டார்கள் என்பதே கருத்தாகும்.

இவ்வாறு கொழும்பிலிருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# தமிழ் இளைஞர்களை வெளியேறுமாறு கொழும்பில் ஆயுதக் குழுவினர் மிரட்டல்

கொழும்பு —

கொழும்பில் வாடகை வீடுகளில் குழுக்களாகத் தங்கியிருக்கும் தமிழ் இளைஞர்களை உடனடியாக வெளியேறிச் சொந்த இடங்களுக்குச் செல்லுமாறு - இராணுவச் சீருடையுடன் வீடு வீடாகச் சென்று ஆயுதக் குழுவினர் மிரட்டியுள்ளனர்.

கொழும்பிலுள்ள பொலிஸ் நிலையங்களில் முறைப்படி பதிவு செய்துகொண்டு வாழ்ந்து வரும் பல தமிழ் இளைஞர்கள் இவ்வாறான புதிய உயிர் அச்சுறுத்தல்களை எதிர்நோக்கியுள்ளனர்.

கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகளுக்காகவும், வெளிநாடு செல்லுதல் போன்ற பல்வேறு காரணங்களுக்காகவும் வாடகை வீடுகளில் வாழ்ந்துவரும் தமிழ் இளைஞர்கள் இனங்காணப்பட்டு, அவர்களின் வதிவிடங்களுக்குச் செல் லும் ஆயுதக் குழுக்கள்- உடன டியாக வீடுகளைவிட்டு வெளியேறுமாறும், யாழ்ப்பாணம் செல்லுமாறும் உத்தரவு பிறப்பித்து வருகின்றனர்.

மாதம்பிட்டி வீதி, கிம்புலபிட்டிய பகுதிகளில் வாழ்ந்து வரும் தமிழ் இளைஞர்களின் வீடுகளுக்குச் சென்ற இராணுவ உடை தரித்த ஆயுதக் குழுவினர், உடனடியாக அவர்களை யாழ்ப்பாணத்துக்குச் செல்லுமாறும், தவறினால் கொழும்பில் மர்மமான பிணங்கள் ஆற்றங்கரைகளில் மிதக்கும் என்றும் எச்சரித்துள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் வாழ்ந்துவரும் தமிழ் இளைஞர்களின் தகவல்களைத் தீவிரமாகச் சேகரித்துவரும் பொலிஸார் - இவற்றைத் தமது இரகசிய ஆயுதக்குழுக்களுக்குக் கொடுத்து, அவர்களைக் கொழும்பிலிருந்து துரத்துவதற்குத் தீவிர செயல்களில் இறங்கியுள்ளதாக நம்பகரமாக அறியமுடிகிறது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட தமிழ் இளைஞர்கள் பலர் நோர்வே நாட்டின் தூதுவர் இல்லத்துக்கும், இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயலத் ஜெயவர்த்தனவுக்கும் அறிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

இதனை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரும் உறுதிப்படுத்தியுள்ளார்.

## மகிந்தவுக்கு ஆதரவான பிரசாரங்கள்
# மக்களைச் சென்றடையவிடாமல் ஒலிபரப்பை நிறுத்த முயற்சி!

கொழும்பு —

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிகள் கேட்கும் மிக முக்கிய பிரதேசங்களுக்கான ஒலிபரப்பை நிறுத்துமாறு கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க தனது பொறியியலாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கூட்டுத்தாபனத் தலைவரின் இந்த உத்தரவு, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் செயற்பாடுகள் - பொதுமக்களைச் சென்றடையவிடாமல் தடுப்பதற்கான ஒரு முயற்சி என பொறியியலாளர்கள் தெரிவித்தனர்.

ஹட்சன் சமரசிங்கவின் இந்த உத்தரவை அடுத்து, கிராமப்புறங்களில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிகழ்ச்சிகளைத் தெளிவாகக் கேட்க முடியாதிருப்பதாகப் பொறியியலாளர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், சில இடங்களில் அன்ரனாக்கள் சரியான திசைகளில் பொருத்தப்படவில்லை. பரிமாற்றல் நிலையம் மற்றும் அன்ரனாக்கள் சரியான திசையில் கிராமப்புறங்களில் பொருத்தப்படாதுவிட்டால், வெளியிடங்களுக்கான ஒலிபரப்புச் சேவைக்கான திட்டம் சரியாகச் செயற்படாது. கூட்டுத்தாபனத் தலைவர் அரச ஆதரவு நிகழ்ச்சித் திட்டங்கள் சிலவற்றைத் தடைசெய்வதால், கிராமப்புறங்களில் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிகழ்ச்சிகளைக் கேட்பவர்களும், எதிர்காலத்தில் கேட்க முடியாத நிலையே உருவாகுமெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை - ஹட்சன் சமரசிங்கவின் இந்த நடவடிக்கையை அடுத்து, தொழிற்சங்கம் கடும் கோபமடைந்துள்ளது.

இலங்கையில் மிகப்பெரிய அளவிலான இந்த இலத்திரனியல் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பரிமாற்ற நிலையங்களை ஹட்சன் சமரசிங்க உடனடியாகச் சரிசெய்யாவிடின், தொழிற்சங்கம் நடவடிக்கை எடுக்குமெனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. (தே)

# முன்னாள் எம்.பி.ஹாரிஸ் மற்றும் அசீஸ் முஸ்லிம் காங்கிரஸுடன் மீண்டும் இணைவு

கொழும்பு —

தேசிய முஸ்லிம் காங்கிரஸில் இதுவரை காலமும் செயற்பட்டு வந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான எச்.எம்.ஹாரிஸ் மற்றும் கே.அசீஸ் ஆகியோர் நேற்றுமுன்தினம் மீண்டும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்துகொண்டார்கள்.

தேசிய முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கலைக்கப்பட்டு விட்டதாக அதன் செயலாளர் நாயகம் என இதுவரைகூறி வந்த எச்.எம்.ஹாரிஸ் நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அறிவித்துள்ளார்.

2002 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் காலத்தில் - சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து வெளியேறிய குறிப்பிட்ட இருவரும், தேசிய முஸ்லிம் காங்கிரஸ் ஊடாகப் பொதுஜன ஐக்கிய முன்னனி வேட்பாளர்களாக அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்ட போதிலும் தோல்வியடைந்தனர்.

அந்த நேரம் அமைச்சர் ஏ.எல்.அதாவுல்லாவைத் தலைவராகக் கொண்டு செயற்பட்டபோதிலும், அவருடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அரசியலிலிருந்து சிலகாலம் ஒதுங்கியிருந்தனர்.

சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களுக்கான தனித்தரப்பு அதிகாரசபைப் பகிர்வில் தனியலகு ஆகியன தொடர்பாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைப்பீடம் உறுதியாக இருப்பதால்தான், இந்த முடிவைத் தாம் எடுத்துள்ளதாகவும் இவர்கள் தெரிவித்தனர்.

# நிதியமைச்சு ஊழியர் தபால்மூலம் வாக்களிக்கும் திகதிகளில் மாற்றம்

கொழும்பு —

தபால் மூலம் வாக்களிக்க தகுதி பெற்றுள்ள நிதியமைச்சின் ஊழியர்கள் பிறிதொரு நாளில் வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய நிதியமைச்சின் ஊழியர்கள் நவம்பர் 9ஆம் 10ஆம்திகதிகளில் வாக்களிக்க முடியும் என தேர்தல் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

வரவு - செலவுத்திட்டம் நவம்பர் மாதம் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதால், பாதுகாப்பு தொடர்பான சிக்கலைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டதாகத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

நிதியமைச்சின் பணிப்பாளர் தமது ஊழியர்களுக்குத் தபால் மூலம் வாக்களிக்கப் பிறிதொரு நாளை வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்ததாகவும் தயானந்த திஸநாயக்க கூறினார்.

இதேவேளை - அரசாங்கத்தின் ஏனைய துறைகளைச் சேர்ந்த ஊழியர்களுக்கான தபால் மூல வாக்களிப்பு நவம்பர் 7ஆம், 8ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு பல்கலைக்கழக விடுதியிலிருந்து மாணவர்கள் அனைவரும் வெளியேறினர்

கொழும்பு —

கொழும்பு பல்கலைக்கழக வளாகத்தில் தங்கியிருந்த மாணவர்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளதாக கறுவாந்தோட்டப் பொலிஸார் தெரிவித்தனர். பொரல்ல டி.சேரம் மாணவர் விடுதியைப் புனரமைப்பதற்காக அந்த மாணவர் விடுதியை இடிப்பதற்குப் பல்கலைக் கழக அதிகாரிகள் தீர்மானித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, விடுதி மாணவர்கள் 41 பேர் தொடர்ந்தும் அங்கு தங்கியிருந்தனர்.

மாணவர் விடுதிகளை விட்டு வெளியேறாதுபோனால், அவர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில் நிதி ரத்துச் செய்யப்படும் எனத் துணைவேந்தர் எச்சரித்துள்ளார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த மாணவர்கள் - கொழும்புப் பல்கலைக் கழத்தின் மாணவர்களுக்கு அனுசரணை வழங்கும் அலுவலகத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் இரவு முழுவதும் தங்கியிருந்தனர்.

பொரல்ல டி.சேரம் விடுதி புனரமைக்கப்படவுள்ளதால், ஆனந்த ராஜகருண மாவத்தையில் மாணவர்கள் தங்கியிருப்பதற்குப் புதிய விடுதி ஒன்றைப் பல்கலைக்கழக நிர்வாகம் வாடகைக்குப் பெற்றுக் கொடுத்ததாகக் கொழும்பு பல்கலைக்கழகத் துணைவேந்தர் டி.ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

# தமிழ்த்தேசிய எழுச்சி நிகழ்வு அம்பாறையிலும் நடைபெறவுள்ளது

கொழும்பு —

அம்பாறை மாவட்டத்தில் தமிழ்த்தேசிய எழுச்சி நிகழ்வு எதிர் வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது.

கடந்த ஜுலை மாதம் வவுனியாவில் வெளியிடப்பட்ட எழுச்சிப் பிரகடனத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில், இந்த எழுச்சி நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த தம்புலுவில் மகா வித்தியாலய விளையாட்டரங்கில் எதிர்வரும் நவம்பர் 12 ஆம் திகதி இந்த எழுச்சி நிகழ்வை உணர்வுபூர்வமாக நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதுடன், அதற்காக முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அம்பாறை மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் நடத்தவிருக்கும் இந்த எழுச்சி நிகழ்வுக்கான பூர்வாங்க ஆலோசனைகளைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கனகசபை பத்மநாதன், பிரதேசங்கள் தோறும் நேரில் சென்று வழங்கிவருகின்றார்.

அவருக்கு உறுதுணையாக மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரனும் அம்பாறை மாவட்டத்தில் தங்கியிருந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.


எதிர்வரும் வாரத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் - அம்பாறை மாவட்டத்துக்கு வருகை தந்து முக்கியத்துவம் வாய்ந்த இந்த எழுச்சி நிகழ்வு வெற்றிகரமாக நடைபெறுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடவிருப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

# இலங்கையுடனான 2ஆவது போட்டி; இந்தியா 8 விக்கெட்டுக்களால் வெற்றி!













மொஹாலி

இந்திய - இலங்கை அணிகளிடையே மொஹாலியில் நேற்று நடைபெற்ற இரண்டாவது சர்வதேச ஒருநாள் போட்டியில் இந்திய அணி 8 விக்கெட்டுக்களால் இலங்கையைத் தோற்கடித்தது.

பகலிரவு போட்டியாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் ராவிட் - களத்தடுப்பைத் தேர்வு செய்தார். இதனால் இலங்கை அணி துடுப்பெடுத்தாடியது. அந்த அணி சார்பாக ஜெயசூரிய மற்றும் சங்கஹார ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கினர்.

ஆனால், முதல் ஓவரே இலங்கை அணிக்கு பேரதிர்ச்சியாக அமைந்தது. அந்த ஓவரின் மூன்றாவது பந்தை ஜெயசூரிய பவுண்டரிக்குத் திருப்பியபோதிலும், அதனை ஷேவாக் பிடித்ததால், அவர் ஓட்டமெதையும் பெறாமலேயே பவிலியன் திரும்பினார்.

இதனையடுத்து அத்தபத்து களமிறங்கினார். அவரும் இரண்டாவது ஓவரில் அகர்கரின் பந்தில் டோனியிடம் பிடிகொடுத்து 4 ஓட்டங்களுடன் வெளியேறினார். இதன்பின் வந்த ஜெயவர்த்தன 7, சங்கஹார 27, டில்ஷான் 0, ஆர்னோல்ட் 15, வாஸ் 7, மஃரூப் 18, சொய்சா 0, முரளிதரன் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். உபுல் சந்தன 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

35.4 ஓவரில் இலங்கை அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றது. 10 உதிரி ஓட்டங்களை இந்திய பந்து வீச்சாளர்கள் விட்டுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் பதான் 4, ஹர்பஜன் மற்றும் யாதவ் இருவரும் தலா 2, அகர்கர் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து 123 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றியென்ற இலக்குடன் இந்திய அணி களமிறங்கியது. இதில் ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய ஷேவாக் மற்றும் சச்சினின் ஆட்டத்தில் அனல் பறந்தது. இருவரும் மாறி மாறி பந்துகளை எல்லைக் கோட்டுக்கு அனுப்பிக் கொண்டிருந்தனர்.

இதில் அணி 80 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 29 பந்துகளில் ஒரு சிக்ஸர், 5 பவுண்டரிகள் அடங்கலாக 38 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஷேவாக், மஃரூப்பின் பந்துவீச்சில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து யாதவ், சச்சினுடன் இணைந்தார். இவர் 19 பந்துகளில் 9 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ஆட்டமிழக், ராவிட் வந்தார். இறுதியில் இந்திய அணி 20.2 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.


இதில் சச்சின் 69 பந்துகளில் 12 பவுண்டரிகளுடன் 70 ஓட்டங்களுடனும், ராவிட் 5 பந்துகளில் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். பந்துவீச்சில் மஃரூப், முரளி இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்த ஆட்டத்தின் நாயகனாக இர்பான் பதான் தெரிவானார்.

## விளையாட்டு

## வசீம் அக்ரமின் சாதனையை நெருங்கிவரும் டெண்டுல்கர்!

மும்பை




சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிக ஆட்டங்களில் விளையாடிய பாகிஸ்தான் வீரர் வசீம் அக்ரமின் சாதனையை இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர் முறியடிக்கும் நிலையை நோக்கி முன்னேறி வருகிறார்.

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் பாகிஸ்தான் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் வசீம் அக்ரம்தான் அதிக ஆட்டங்களில் விளையாடியுள்ளார். அவர் 356 போட்டிகளில் பங்கேற்றுள்ளார். இதுதான் வீரர் ஒருவர் அதிக போட்டிகளில் பங்கேற்று விளையாடிய சாதனை.

இந்தச் சாதனையை டெண்டுல்கர் நெருங்கி வருகிறார். 32 வயதாகும் அவர் நேற்று இலங்கைக்கு எதிராக நடந்த 2ஆவது போட்டியில் ஆடியதன் மூலம் 350 போட்டிகளை நிறைவு செய்தார்.

வசீம் அக்ரமின் சாதனையை முறியடிக்க இன்னும் 6 ஆட்டங்களில் டெண்டுல்கர் விளையாடவேண்டும். இலங்கைக்கு எதிரான தொடரில் இன்னும் 5 ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. இதில் டெண்டுல்கர் விளையாடுவார்.

இலங்கைத் தொடரை அடுத்து தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடுகிறது. இரு அணிகளிடையேயான முதல் ஒருநாள் போட்டி அடுத்தமாதம் 16ஆம் திகதி ஹைதராபாத்தில் நடைபெறும். 2ஆவது போட்டி பெங்களூரில் 19ஆம் திகதி நடைபெறும்.



## இங்கிலாந்துடனான முதல் டெஸ்ட்; காயத்தால் அப்துல் ரசாக் நீக்கம்!

இஸ்லாமாபாத்

பாகிஸ்தான் அணியின் சகலதுறை ஆட்டக்காரரான அப்துல் ரசாக் இங்கிலாந்து அணிக்கு எதிராக முல்டானில் நடைபெறவுள்ள முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடமாட்டாரென அறிவிக்கப்பட்டுள்ளது.



25 வயதான அப்துல் ரசாக் - முழங்கையில் ஏற்பட்ட காயம் காரணமாக 3 வாரகால ஓய்வில் இருந்து வருகிறார். இதனால் இங்கிலாந்து அணியுடனான 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டமான முல்டான் போட்டியில் பங்கேற்கமாட்டார். இந்தப் போட்டி நவம்பர் 12ஆம் திகதி நடைபெறும்.

16பேர் கொண்ட அணியில் ரசாக் உள்ளடக்கப்படவில்லை. எனினும் - இவர் குணமடைவதற்கு கால அவசாகம் வழங்கப்பட்டிருப்பதாகவும் அணியின் தேர்வாளர் வசீம் பாரி தெரிவித்தார்.

இங்கிலாந்து அணியுடனான போட்டியில் பங்கேற்கவுள்ள பாகிஸ்தான் அணி இந்த வார இறுதியில் வெளியிடப்படவுள்ளது. 37 டெஸ்ட் போட்டியில் விளையாடியுள்ள ரசாக் 77 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருப்பதுடன் - 1523 ஓட்டங்களையும் எடுத்துள்ளார்.

196 ஒருநாள் போட்டிகளில் 221 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருக்கும் இவர் 3880 ஓட்டங்களை எடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## அவுஸ்ரேலிய பயிற்சி ஆட்டத்தில் மேற்கிந்தியா வலுவான நிலையில்

பிறிஸ்பேர்ன்




அவுஸ்ரேலியாவில் சுற்றுப் பயணம் செய்துள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி, குயின்ஸ்லாந்து அணியுடன் பங்கேற்ற பயிற்சி ஆட்டத்தில் 3 விக்கெட் இழப்புக்கு 252 ஓட்டங்களை எடுத்தது.

பிறிஸ்பேனில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய குயின்ஸ்லாந்து அணி 323 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. நேற்று இரண்டாவது நாள் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி துடுப்பெடுத்தாடியது.

இதில் காயம் காரணமாக டெஸ்ட் போட்டியில் இருந்து விலகிய பவல் ஹின்ட்ஸுக்கு பதிலாக அணியில் சேர்க்கப்பட்ட டெவொன் சிமித் தொடக்க வீரராக இறங்கி சதம் அடித்தார்.

இரண்டாம் நாள் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 3 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 252 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில் சிமித் 130 ஓட்டங்களையும், கிறிஸ் கைல் 58 ஓட்டங்களையும், சர்வான் 37 ஓட்டங்களையும் எடுத்தனர். கிரனெடா வீரரான சிமித் 24 வயதுடையவர் என்பது குறிப்பிடத்தக்கது.



அவுஸ்ரேலிய நாட்டின் வின்ஸ் நகரில் பெண்களுக்கான ரெனிஸ் போட்டி நடைபெற்று வருகிறது. இதன் 2ஆவது சுற்றில் ரஷ்ய வீராங்கனை பெட்ரோவா, சுவீடன் வீராங்கனையான சோபியாவுக்கு எதிராக பந்தை திருப்பும் காட்சி. இதில் பெட்ரோவா 6-3, 6-3 என்ற நேர் செட்டில் வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

## மேற்கிந்திய அணியுடன் டெஸ்ட்; அவுஸ்ரேலிய அணி அறிவிப்பு!

சிட்னி

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்கான அவுஸ்ரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலிய - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளிடையிலான 3 டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட தொடரின் முதலாவது ஆட்டம் எதிர்வரும் 3ஆம் திகதி பிரிஸ்பேனில் தொடங்கவுள்ளது.

இந்தநிலையில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான 12 பேர் கொண்ட அவுஸ்ரேலிய டெஸ்ட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் வேகப்பந்து வீச்சாளர் நதன் பிராக்கன் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவுஸ்ரேலிய அணி விபரம் வருமாறு -

றிக்கி பொண்டிங் (கப்டன்), அடம் கில்கிறிஸ்ட், நதன் பிராக்கன், மைக்கல் கிளார்க், ஹைடன், கடிச், ஜஸ்ரின் லாங்கர், பிரெட் லீ, மக்கில், மக்ரா, ஷேன் வோன் மற்றும் ஷேன் வட்சன்.

## டெஸ்ட் போட்டி மைதானங்கள் இன்று மும்பையில் அறிவிப்பு!

மும்பை

இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடிவரும் இலங்கை அணியுடனான டெஸ்ட் போட்டிகள் நடைபெறும் மைதானங்களை இந்திய கிரிக்கெட் சபை இன்று முடிவு செய்யும்.

மும்பையில் இன்று கூடவுள்ள இந்தியக் கிரிக்கெட் சபை டெஸ்ட் போட்டிகள் நடைபெறவுள்ள மைதானங்களை அறிவிக்கும்.

தற்போது 7 ஒருநாள் போட்டித் தொடரில் ஆடிவரும் இலங்கை அணி நாடு திரும்பிய பின்னர் மீண்டும் டிசம்பர் மாதம் 3 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்க இந்தியா செல்லும்.

டெஸ்ட் போட்டித் தொடர் எதிர்வரும் டிசம்பர் 2ஆம் திகதி தொடங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பசியால் வாடிய சிங்கமும் அப்பாவி ஒட்டகமும்

வியாபாரிகள் குழுவைச் சேர்ந்த வணிகரொருவர், ஒட்டகமொன்று அதிகம் நடக்கமுடியாமல் பலவீனமுற்றிருப்பதைக் கண்டதும், அது தன் வழியே சென்று தன்னைக் காப்பாற்றிக் கொள்ளட்டும் என விரும்பி, அதன் சுமைகளை இறக்கிவிட்டுச் சென்றுவிட்டார். உயரமாக வளர்ந்த புற்களால் சூழப்பட்ட நீரோடையொன்றைக் கண்டுபிடித்த ஒட்டகம், அங்கிருந்த சுவையான புல்லைச் சாப்பிட்டும், நீரோடை நீரைக் குடித்துக்கொண்டும், குகைக்குள் புகுந்து வாழ்ந்து வந்தது. இரவுப்பொழுதின் ஓய்வு அதற்குப் புதிய அனுபவமாகவும், உற்சாகமூட்டக்கூடியதாகவும் இருந்ததால் பாரிய சத்தத்தில் கனைத்து கொண்டது.



காட்டரசனான சிங்கத்துக்கு அதன் கனைப்புச் சத்தம் கேட்டது. அதிசயமான குரலாக இருக்கிறதேயென்று ஆச்சரியமடைந்தது. அவரது அமைச்சர்களான நரியாரும், சிறுத்தையும் தாம் முன்னர் இப்படிப்பட்ட குரலோசையைக் கேட்டதில்லை என்றபோது, மூன்றாவது அமைச்சரான காகமும் அங்குதோன்றி, ''என் எஜமானரே, எமது காட்டுக்குள் ஒட்டகம் எனப்படும் புதிய மிருகமொன்று வந்திருக்கிறது. பார்வைக்கு செம்பழுப்பு நிறமுடைய அதன் இறைச்சி மிகச் சுவையுள்ளதாயிருக்கும்.' அந்த இறைச்சியில் எனக்கு ஆவலில்லை'' எனக் கூறிய காகத்தை நோக்கி உறுமியது சிங்கம். புதியவரான அவரை நாம் ஒரு விருந்தினராக நடத்த வேண்டும். நீங்கள் மூவருமாக அங்குபோய் அவரை எனக்குமுன்னால் கொண்டுவர வேண்டும்! ஒட்டகத்தைக் கண்டுபிடித்த இடத்தைத் தேடிச் சென்ற காகத்தைப் பின்தொடர்ந்தன சிறுத்தையும், நரியும்





சிங்கம் அழைப்பு விடுத்ததாக எடுத்துரைத்ததும், ஒட்டகம் அவர்களுடன் சென்றது.

''நல்வரவாகுக!'' என வரவேற்ற சிங்கம், ''தத்தமது இனங்களைப் பிரதிநிதித்துவமளிக்கும் வகையில், மூன்று அமைச்சர்களை ஏற்கனவே நியமித்திருக்கிறேன். இருந்தும் நீர் தனித்துவம்பெற்ற ஆளாக இருப்பதால் என்னுடைய நான்காவது அமைச்சராக உம்மை நியமிக்கிறேன்'' என்றது தலையைத் தாழ்த்திய ஒட்டகம், ''மிக்க நன்றி என் தலைவரே!'' என்றது. அடுத்த மூன்று அமைச்சர்களும் அதில் நம்பிக்கையிழந்தனர். ஏனென்றால் அவர்கள் ஒட்டக இறைச்சி உண்ணும் விருப்பத்தை ஏற்காதிருந்தனர்.



அமைச்சர்கள் மூவரும் சிங்கத்தின் மதிய, இரவு உணவுகளிலிருந்து கிடைக்கும் மீதமானவைகளுடன் திருப்திப்பட்டு வந்தனர். ஒரு சமயம் அந்தச் சிங்கம் காட்டுப் பன்றி ஒன்றுடன் மோதியதில் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது. உணவைத் தேடிச் செல்லும் அதன் வழமையான வேலைத் திட்டத்தை அதற்கேற்பட்ட காயங்கள் தடுத்து விட்டன. சிங்கமும் அதன் மூன்று அமைச்சர்களும் தொடர்ந்து உணவில்லாது இருந்தவேளை தாவரபட்சணியான ஒட்டகம் புற்களையும், இலைகளையும் சாப்பிடக்கூடியதாக இருந்தது.



இரண்டுநாட்களின் பின் சிங்கம் தன் மூன்று அமைச்சர்களையும் அழைத்து ஏதாவது மிருகத்தை வேட்டையாடி வரும்படி பணித்தது. சிறுத்தையும், நரியும் வேட்டையாடுவது எப்படி என்ற விடயத்தை மறந்து போயிருந்தன. பூச்சிகள், புழுக்களை மட்டும் காகத்தால் பெறக்கூடியதாக இருந்தது. அவை மீண்டும் சிங்கத்தினருகே சென்றபோது, ''நான் பசியால் செத்துக் கொண்டிருக்கிறேன்'' என்றவுடன் நரி தடுமாறியது. ''எதையுமே நாம் பெற்றுக்கொள்ள முடியாதிருக்கிறோம் தலைவரே, ஒட்டகத்தையே கொன்று விடுவோமா?'' என்ற நரியாரில் கோபமடைந்த சிங்கம் ''எனது அமைச்சராக அவரை வைத்திருக்கும் நிலையில் இதை அனுமதிக்க முடியுமா?'' என்றவுடன் வஞ்சகக் குள்ளனான நரி, ஒருவேளை அவரே உங்கள் உணவுக்கு தன்னையே ஒப்படைக்க முன் வரலாமல்லவா? பாதிக்குரலில் உறுமியது சிங்கம்.



இப்போது ஒட்டகத்திடம் மூவரும் சென்றனர். ''இல்லையில்லை எனது எஜமான் உயிரைக்காக்க என் உடலைக் கொடுக்கப்போகிறேன்'' காகம் இரக்கப்பட்டுக் கூறிய விடயம் ஒட்டகத்திற்குப் புரியவில்லை. ''உங்கள் எஜமானருக்கு என்ன நடந்திருக்கிறது?'' ''அவர் பசியால் செத்துக் கொண்டிருக்கிறார். அவர் பசியைப் போக்க காகம் தன் உடலைக் கொடுக்க விரும்புகிறது. அதை நாம் வற்புறுத்துகிறோம்'' என்றது நரி. ஒட்டகமும் அவர்களோடு சென்றது.

''என் தலைவரே, இதோ நான் இருக்கிறேன். தயவுசெய்து என்னைச் சாப்பிடுங்கள்!'' எனக் காகம் கூறியது. ''சாப்பிடுவதற்கு உன்னில் என்ன தான் இருக்கிறது'' என்றது சிங்கம். நரி முன்னே சென்று ''என் எஜமானரே! என்னையே சாப்பிடுங்கள்'' என்றதைக் கேட்ட சிங்கம் ''உன்னில் எலும்புகள் மட்டுந்தான் உள்ளது'' என்றது. சிறுத்தையும் தன் பங்களிப்புக்காகச் சென்றபோது ''நாமிருவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகையால் எப்படி உன்னைச் சாப்பிடமுடியும்?'' என்றது சிங்கம். இப்போது தனது முறை வந்து விட்டதைப்பற்றிச் சிந்தித்தது ஒட்டகம். இதைக் கேட்பதற்காகவே காத்துக்கொண்டிருந்த சிங்கம் உடனடியாக ஒட்டகத்தின் திமில் மீதாகப் பாய்ந்தது!









# துருவன்

## இது வாசிப்பு மாதம் வாசிப்பதும் யோசிப்பதும்



## வாசிப்பதால் கிடைக்கும் நன்மைகள்

- தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
- எம்மைச் சுற்றியுள்ள உலகத்தினைப் பற்றிய விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ளலாம். இதன் மூலம் ஒரு பரந்த மனப்பான்மையைத் தோற்றுவிக்கலாம்.
- தர்க்க ரீதியானதும், விமர்சனக் கண்ணோட்டத்துடனுமான சிந்தனைத் திறன்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
- எமது வாழ்வினதும், சமூகத்தினதும், நாட்டினதும் சமூக, அரசியல், அபிவிருத்திப் போக்குகளில் ஆக்கபூர்வமான முறையில் பங்கெடுக்கலாம்.
- மொழி வல்லமை பெறலாம்.
- பேச்சு மற்றும் எழுத்தாற்றலை விருத்தி செய்யலாம்.
- குறித்த பாடம் தொடர்பான அறிவினை மாணவரிடத்தும், ஆசிரியரிடத்தும் ஆழப்படுத்தலாம்.
- எமது மூளையின் உருவகத் திறமைகளையும் கற்பனா சக்தியையும் அதிகரிக்கலாம்.
- ஞாபக சக்தியைக் கூட்டலாம்.
- நம்மை மறந்து விரும்பிய உலகத்தில் சஞ்சரித்து மகிழ்ச்சியில் திளைக்கலாம்!

## அசிங்கம் உலகில் ஏதுண்டு?

எறும்பு ஊருது பார் தம்பி
சுறுசுறுப் பாக ஓடுதுபார்
ஓடி ஓடித் தீன் தேடி
எங்கோ கொண்டு செல்கிறதே.

தலையளவான தீனியொன்றை
தாங்கிக் கொண்டு செல்கிறதே
உறவுகள் எல்லாம் ஒன்றன்பின்
ஒன்றாய்க் கூடிச் செல்கிறதே.

சின்னஞ் சிறிய உயிரினந்தான்
உழைப்புத் திறனைப் பார்தம்பி
யாரையும் நம்பிக் கொள்ளாமல்
தன்னை நம்பிக் கொள்கிறதே.

தெருவில் பிச்சை கேட்கின்ற
ஆறறிவுள்ள மனிதனைப் பார்
அடடா! இவனைப் போலவொரு
அசிங்கம் உலகில் ஏதுண்டு?

-கிருபா.



# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா? அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.
இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.
கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-
இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

# இளந்தேனீக்கள் கழகம்

## விண்ணப்பம்

முழுப் பெயர் :.............................................
கற்கும் பாடசாலை :.............................................
கற்கும் தரம் :.............................................
வீட்டு முகவரி :.............................................
பிறந்த திகதி :.............................................
ஆர்வமுள்ள துறைகள் :.............................................
.............................................

................ ................
திகதி ஒப்பம்

................ ................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

# இளந்தேனீக்கள் கழக அங்கத்தவர்கள்


பெயர் :- அசோக்கமாலா சிறிஸ்கந்தராசா
தரம் :- 11
பாடசாலை :- யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
ஆர்வமுள்ள துறைகள் :- பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்


பெயர் :- செல்வராஜா பிருந்தாபன்
தரம் :- 03
பாடசாலை :- யா/கர.மாணிக்கவாசகர் வித்தியாலயம்.
ஆர்வமுள்ள துறைகள் :- பாட்டுப்பாடுதல், கதை கூறல்



பெயர் :- யோகிதா யோகேஸ்வரன்
தரம் :- 07
பாடசாலை :- யா/பண்ணாகம் மெய் கண்டான் மகா வித்தி யாலயம்.
ஆர்வமுள்ள துறைகள் :- பாடம்படித்தல், கதை வாசித்தல், திரைப் படம் பார்த்தல்.


பெயர் :- நாகரெத்தினம் கஜரூபன்
தரம் :- 09
பாடசாலை :- யா/வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம்.
ஆர்வமுள்ள துறைகள் :- சதுரங்க விளையாட்டு, பத்திரிகை வாசித்தல், தபாலுறை ஒட்டுதல்.

பெயர் :- தமிழினி நடராசா
தரம் :- 05
பாடசாலை :- யா/யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.
ஆர்வமுள்ள துறைகள் :- நடனம், சங்கீதம்

பெயர் :- ஆஷா மகேந்திரன்
தரம் :- 08
பாடசாலை :- மானிப்பாய் சென் ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலை.
ஆர்வமுள்ள துறைகள் :- சித்திரம்

பெயர் :- தனுசியா நேசராஜன்
தரம் :- 07
பாடசாலை :- பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை.
ஆர்வமுள்ள துறைகள் :- வாசித்தல், சித்திரம் வரைதல்


பெயர் :- வைத்தீஸ்வரன் குருபரன்
தரம் :- 08
பாடசாலை :- யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
ஆர்வமுள்ள துறைகள் :- விளையாட்டுத்துறை, கிரிக்கெற் படம் சேகரித்தல்.

பெயர் :- கி.யுகன்
தரம் :- 07
பாடசாலை :- யா/கலட்டி றோ.க.த.ஆண்கள் பாடசாலை.
ஆர்வமுள்ள துறைகள் :- வாசித்தல், சித்திரம் வரைதல்

# கண் தெரியாதவர்கள் யார்?

ஒருநாள் - பேரரசராக இருந்த அக்பர் தனது அமைச்சரான பீர்பாலை அழைத்தார். அவரிடம் "அமைச்சரே! மகாராணியார் நாட்டிலுள்ள குருடர்களுக்குத் தானம் கொடுக்க விரும்புகிறார். அதனால் குருடர்களின் விபரத்தை ஒரு வாரத்துக்குள் எடுத்துத் தரவேண்டும்" எனக் கட்டளையிட்டார்.



பீர்பால் எதிலும் வித்தியாசமான கருத்துடன் பேசுவது வழக்கம். ஆகவே அவர் அக்பரிடம், "அரசே! குருடர்களின் விபரத்தைப் பெறுவது என்பது அவ்வளவு எளிதானது அல்ல. எமது நாட்டில் குருடர்களே அதிகமாக உள்ளனர். ஆகையால் ஒரு வாரத்துக்குள் இந்த வேலையை முடிக்க இயலாது'' என்றார்.

அரசர் திகைத்துப்போனார். "அமைச்சரே! நீர் என்ன கூறுகிறீர்? எமது நாட்டில் குருடர்கள்தான் அதிகம் என்பதை ஏற்றுக்கொள்ளலாமா? அப்படியென்றால் அதை நிரூபிக்க முடியுமா?" என்று பீர்பாலிடம் அரசன் வினவினார்.

''ஏன் முடியாது. நாளைக்கே அதை நிரூபித்துக் காட்டுகிறேன்!" என்றார் பீர்பால்.

◆◆◆ ◆◆◆ ◆◆◆

அடுத்தநாள்...

பீர்பால் தன்னுடன் ஒரு வீரனைத் துணைக்கு அழைத்துக்கொண்டார். தான் சொல்பவர்களின் பெயர்களைப் பதிவுசெய்யுமாறு மட்டும் சொன்னார். அரண்மனை வாசலில் இருந்துகொண்டு பாய் பின்னுவதில் ஈடுபட்டார்.

அரண்மனைக்கு வருபவர்கள் பீர்பாலைப் பார்த்ததும், "என்ன அமைச்சரே! என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேள்வி எழுப்பிக்கொண்டு சென்றனர். பீர்பால் ஒன்றையும் கவனிக்காதவராகிப் பாய் பின்னுவதிலேயே மும்முரமாக இருந்தார்.

பீர்பாலிடம் கேள்வி கேட்ட ஒவ்வொருவரினது பெயர்களையும் அங்கிருந்த வீரன் பதிவு செய்துகொண்டிருந்தான். இறுதியாக அக்பர் வந்து கொண்டிருந்தார். அமைச்சரைத் திடீரென வாசலில் கண்டதும், "என்ன அமைச்சரே! வாசலில் அமர்ந்து என்ன செய்துகொண்டிருக்கிறீர்?" என்று கேட்டார். பீர்பாலிடம் இருந்து பதில் இல்லை. அவர் பாய் பின்னுவதில் கண்ணாக இருந்தார். அரசர் பேசாமல் சென்றுகொண்டிருந்தார்.

பீர்பால், வீரனிடம் இருந்த பத்திரத்தை வாங்கிப் பார்த்தார். அதில் ஏகப்பட்டவர்களின் பெயர்கள் பதிவாகியிருந்தன. மன்னரின் பெயரும் உட்பட. பீர்பால் அதை எடுத்துக்கொண்டு அரண்மனைக்குள் நுழைந்தார். அரசசபையில் வீற்றிருந்தவர்கள் ஆவலுடன் பார்த்திருக்க, தான் கொண்டுசென்ற பெயர்ப்பட்டியலைக் காண்பித்தார்.

"என்ன பட்டியல் இது?" என்று அரசர் விசாரித்தார்.

''எமது அரண்மனை வாசலில் மட்டும் கணக்கெடுக்கப்பட்ட கண்தெரியாதவர்களின் பட்டியல்தான் இது'' என்று பீர்பால் சட்டெனப் பதிலளித்தார்.

அரசர் உட்பட எல்லோரும் திகைத்துப்போயினர். பீர்பால் எல்லோருக்கும் விளக்கமளித்தார்.

"நான் இன்று அரண்மனை வாசலில் இருந்து பாய் ஒன்றைப் பின்னிக்கொண்டிருந்தேன். அந்த வழியே வந்தவர்கள் அனைவரும் என்னைப்பார்த்து, என்ன செய்துகொண்டிருக்கிறீர்? என்ன செய்து கொண்டிருக்கிறீர்? என்று கேட்டபடியே சென்றனர். எல்லோரும் பார்க்கும்படியாக நான் பாய் பின்னிக்கொண்டிருந்தது இவர்களுக்குத் தெரியவில்லையென்றால் - இவர்கள் கண் தெரியாதவர்கள்தானே. அவர்கள் அத்தனை பேரையும் இந்த வீரனே பதிவுசெய்து கொண்டிருந்தான்'' என்று பீர்பால் சொன்னதும் அரசரின் திகைப்பு நீங்கி பீர்பாலின் சாமர்த்தியத்தைப் பாராட்டினர்.

# நீங்கள் ஒரு குட்டி மந்திரவாதி ஆகுங்கள்

**1. தீயணைப்பானை சினிமா கொட்டகையில் பார்த்திருப்பீர்கள்! இதை எளிய முறையில் நாமே தயாரிக்கலாம். எப்படி?**

ஒரு சிறிய இன்ஜக்ஷன் பாட்டிலில் சமையலுக்குப் பயன்படுத்தும் அப்பச்சோடா (சோடியம் பைகார்பனேட்) உடன் எலுமிச்சைசாறு (சிட்ரிக் அமிலம்) சேர்க்க காபனீரொக்சைட் உண்டாகும். சீசாவின் வாயில் ஒரு துளையுள்ள தக்கையில் செருகி அதில் ஒரு ரீபிளை இணைக்கவும். இப்போது தீயணைப்பான் ரெடி. இதை எரியும் மெழுகுவர்த்தியின் மீது காண்பிக்க சுடர் அணைக்கும் பண்பு உண்டு. இது எரிதலுக்குத் துணைபுரியாது. செய்து மகிழுங்கள்.

**2. கத்தியால் வெட்டாமலேயே இரத்தம்!**

எலுமிச்சைப் பழத்தை எடுத்துக்கொண்டு அதில் சிறிஞ்சின் மூலம் அமோனியம் தயோ சயனேட்டை உள்ளே செலுத்துங்கள். அடுத்து பெரிக் குளோரைடை கத்தியில் தடவி பின் பழத்தை அரியவும். இப்போது பழம் இரத்தச் சிவப்பாக மாறும். (சயனேட் கொடிய விஷம் என்பதால் பாதுகாப்பாகப் பயன்படுத்தவும்)

**3. தீப்பெட்டி இல்லாமல் தீ மூட்டலாம்!**

மருந்துக் கடைக்குச் சென்று பொட்டாசியம் பெர்மங்கனேட்டையும், கிளிசரின் திரவத்தையும் வாங்கி வாருங்கள். ஒரு தட்டில் பெர்மாங்கனேட்டைக் கொட்டி அதன் மேலே துண்டுக் காகிதங்களைப்போட்டு மூடிவிடுங்கள். இப்போது நிறமற்ற கிளிசரினை அதன்மீது ஊற்ற, கொஞ்ச நேரத்தில் காகிதம் தீப்பற்றி எரியும்.


**3. மந்திரம் போடாமலே பந்தை ஆட்டுவிக்கலாம்.**

ஒரு பாத்திரத்தில் அசிட்டிக் அமிலம் எடுத்துக்கொண்டு அதனுள் நாப்தலின் பந்துகளைப் போட்டுவிட்டுக் கவனிக்க. சிறிது நேரத்தில் பந்து மேலும், கீழும் போய்வருவதைக் காணலாம்.

## உங்கள் கைவண்ணம்



கி.யுகன்
தரம் - 07
யா/கலட்டி றோ.க.த ஆண்கள் பாடசாலை




அ.மக்லின்
தரம் - 07
கலட்டி றோ.க.பாடசாலை




அ.மக்லின்
தம - 07
கலட்டி றோ.க.பாடசாலை



அ.மக்லின்
தரம் - 07
கலட்ட றோ.க.பாடசாலை



த.இதயன்
தரம் - 10
யாழ்/புனித சென்.சாள்ஸ் மகாவித்தியாலயம்



ஜெ.ஆன் கனிஸ்ரா
தரம் - 07
யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

## பொது அறிவு

1. ஆறும் கடலும் கலக்கும் இடம் எது?
   கழிமுகம்
2. புன்னகை நாடு எனப்படுவது எந்த நாடு?
   தாய்லாந்து
3. உலகின் மிக உயரமான மேட்டுநிலம் எது?
   திபெத் மேட்டுநிலம்
4. பறக்கமுடியாத பூச்சிகள் எவை?
   சிலந்தி. எறும்பு
5. இந்தியாவின் தேசியப் பறவை எது?
   மயில்
6. சூரிய குடும்பத்திலேயே மிகப் பெரிய கோள் எது?
   வியாழன்
7. காற்று மண்டலத்துக்கு அப்பால் பயணம் செய்ய உதவுவது எது?
   ரொக்கற்
8. சூரியனுக்கு அருகில் உள்ள கோள் எது?
   புதன்
9. சூரியனில் இருந்து தொலைவில் உள்ள கோள் எது?
   புளூட்டோ.

ச.அருள்பவன்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

## நகரங்களும் தலைநகரங்களும்

| | | |
|---|---|---|
| 01. இலங்கை | - | ஸ்ரீ ஜெயவர்த்தனபுரம் |
| 02. இந்தியா | - | புதுடில்லி |
| 03. பாகிஸ்தான் | - | இஸ்லாமாபாத் |
| 04. பங்களாதேஷ் | - | டாக்கா |
| 05. பூட்டான் | - | திம்பு |
| 06. நேபாளம் | - | டாக்கா |
| 07. மாலைதீவுகள் | - | மாலே |
| 08. ஜப்பான் | - | டோக்கியோ |
| 09. ரஷ்யா | - | மொஸ்கோ |
| 10. அமெரிக்கா | - | வாஷிங்டன் |
| 11. அவுஸ்திரேலியா | - | சிட்னி |
| 12. நோர்வே | - | ஒஸ்லோ |

ச.அருள்பவன்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

ஈழநாடு சிறுவர் அரங்கம்
29.10.2005 - சனிக்கிழமை - பக்கம் 07

# இன்றைய செய்திகள்

பெரியம்மை குழந்தைகளைத் தாக்கும் கொடிய நோய். இந்த நோய்க் கான மருந்தைக் கண்டுபிடிப் பதற்காக எட்வேர்ட் ஜென்னர் என்பவர் 20 வருடங்களாக ஆய்வுகள் செய்தார். அதன் பயனாக அம்மைப் பால் குத்தும் முறையைக் கொண்டு வந்தார். நோயுற்ற மக்களுக்கு இலவச மாகவே பணிபுரிந்தார். இவர் இங்கிலாந்திலுள்ள பெர்க் கிலி என்ற நகரில்பிறந்தார்.

தொலைபேசியை முதன் முதலில் கண்டுபிடித்தவர் அலெக்சாண்டர் கிரகாம்பெல் என்பவர். தனது கண்டு பிடிப்பை உறுதிசெய்வதற்காக பல வழக்குகளைச் சந்தித்தவர். 600 வழக்குகளைச் சந்தித்து அதன் பின்னர்தான் அதற்கான உரிமையைப் பெற்றார். இவர் 1847 ஆம் ஆண்டு மார்ச்மாதம் 3 ஆம் திகதி ஸ்கொட்லாந்தி லுள்ள எடின்பேர்க் என்ற கிராமத்தில் பிறந்தார்.

தோமஸ் அல்வா எடி சனை அறிந்துள் ளீர்களா?... பள்ளிக் கூடப் படிப்பையே அறிந் திராத ஒருவர், உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானியாக வந்துள் ளார் என்பது உங்களுக்கு அதிசய மாக இல்லையா? மூன்றே மூன்று மாதங்கள் மட்டும் தான் இவர் பாடசா லைக் கட்டடத்துள் நுழைந்துள்ளார். ஆனால் உலகில் கூடுதலான விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களைக் கண்டறிந்து கொண்டவர். மின்சாரம் சேமிக்கும் பற்றி சம்பந்தமான ஆய்வினை பத்தாயிரம் முறைசெய்தபின்னரே சரியான முடிவுக்கு வந்தார். அப்படி யானால் விடாமுயற்சிக்கும் எடுத்துக்காட்டாக அவர் இருந்துள்ளார் என் பது உண்மை யாகும்.


'பொம்மை' என்ற சொல் எப்படி வந்தது தெரியுமா? குரங்குப் பொம்மை என்கிறோம். அது மெய்யாகவே குரங்கைப் போல இருக்கிறது. ஆனால் அது மெய் அல்ல; பொய்யானது. பொய்யானது ஒன்று மெய்யாகத் தெரிவதனாலேதான் பொய் + மெய் = பொம்மை என்று ஆகியுள்ளது.

உலகில் 2000 இற்கும் மேற்பட்ட பாம்பு இனங்கள் உள்ளன இந்தி யாவில் சுமார் 230 வகை யான பாம்பு இனங்கள் உண்டு. இந்தியப் பாம்புகளில் 55 இனங்க ளுக்கு 'விஷச்சுரப்பிகள் உண்டு. எலி, தவளை, சிறு பறவைகள் ஆகிய இரை ளைப் பிடிப்பதற்கு பாம்புக்கு விஷம் உதவுகிறது. மிக அதிக விஷமுள்ள பாம்புகள் அவுஸ்ரேலியாவில் உள்ளன. ஆரோக்கியமான மனிதனைக் கொல்ல நல்லபாம்பின் விஷம் 4அல்லது 5 துளி தேவைப்படும்.




தகாத நட்பு
முன்னொரு காலம்... ஜம்பு என்ற இளம் சிங்கம் குடும்பத்தவருடன் வன்னிக் காட்டில் வாழ்ந்து வந்தது.
வேட்டையாடச் சென்றசமயம், அதன் வழியில் கிரி என்ற ஒநாய் குறுக்கிட்டது. கிரியோ சிங்கத்தைத் தன் வழிக்குக் கொண்டுவர முயன்றது.
உங்களுக்காக நான் எதையும் செய்யத் தயாராயிருக்கிறேன் தலைவா!
ஜம்புவுக்கும் தன் ஆவலை வெளிப்படுத்தியது.
குதிரை இறைச்சியைச் சாப்பிட்டிருக்கிறீரா?
அந்த இறைச்சி மிகவும் ருசியானது. ஒரு குதிரீ ஸையை இன்றைக்கே கொன்று விடுவோமா?
குதிரைகளை எங்கே கண்டுபிடிப்பது?
நகரின் ஆற்றங்கரைப் பக்கமாக இருக்கின்றனவே! உங்களை நானே அங்கு கூட்டிச்செல்கிறேன்.
வாய்ப்புகள் அதிகரிக்க, அதிகரிக்க கிரியின் வாழ்க்கை இனிதாக வந்துகொண்டிருந்தது. அதேவேளை குதிரை இறைச்சியையும் சுவைத்துவிட ஆசைப்பட்டது.
கிரியின் வாயில் நீர் ஊற்றெடுத்தது. ஜம்புவும் கிரிக்காக வேட்டையாடத் தயாரானது.
அரசனின் குதிரைகள் தினசரி நீராடிக் களிக்கும் ஆற்றங்கரைக்கே அவை வந்தன. ஜம்பு மிக இலகுவாகக் குதிரை ஒன்றைக் கொன்றுபோட்டபின் தமது குகைக்கு இழுத்துச் சென்றன.
ருசித்துச் சுவைத்து விடுவோமே!
ஆனால் ஜம்புவின் தந்தை இதை அனுமதிக்கமறுத்தது.
அரசனுக்குச் சொந்தமான இந்தக் குதிரைகளைக் கொல்வதன் மூலம் உயிருக்கு ஆபத்தைத்தேடவேண்டாம்.
இந்தக் கிரி இயல்பிலேயே மிகமோசக்காரன். அவன் உன்னை ஆபத்தில் மாட்டிவைத்துவிடுவான்.
தந்தையின் புத்திமதி ஜம்புவின் மூளைக்கு ஏறவில்லை. செயலில் தீவிரம் காட்டியது.
இவைகளை அரசன் மிக விரைவாக அறிந்துகொண்டான்.
குதிரைகளை நீராடச்செய்ய நகருக்குள்ளேயே தடாகமொன்றை அமைத்தான்.
ஜம்புவை இவையெல்லாம் கட்டுப்படுத்தவில்லை.
கிரியினால் தூண்டப்பட்ட ஜம்பு நகர்ப்புற மதிற் சுவர்களையும் தாண்டிக் குதிரைகளைச் சூறையாடியது.
அந்தக் கிழட்டுச் சிங்கம் தன் மகனைத் திருத்த முடியாது கவலையடைந்தது.




கிழட்டுச் சிங்கம் மீண்டும் மகனைஎச்சரித்தது.
அந்தநேரம்... அரச மாளிகையில்...
என் குதிரைகளையெல்லாம் கோட்டையின் உட்புறத்தில் நிரையாக நிறுத்தி வைத்துக்கொள்வேன்.
அரசனின் குதிரைகள் யாவும் வரிசையாகக் கட்டப்பட்ட அமைவிடங்களில் நிறுத்தப்பட்டன
இப்போது கோட்டையையும், மதிற் சுவர்களையும் கணக்கெடுத்த ஜம்பு, கிரிக்கு உதவுவதற்காக, அங்கிருந்தும் குதிரையைக் கொண்டு வருவதில் வெற்றி கண்டது.
இந்தச் செயலைக் கண்ட கிழட்டுச் சிங்கம் தன் மகனை இவ்வாறு எச்சரித்தது.
மகனே! நீயே ஆபத்தை வரவழைத்துக்கொள்கிறாய். கிரியை விட்டு விலகியிரு! அவனைப் பின்பற்றாதே!
மாளிகையில்...
அந்தச் சிங்கத்தைக் கொல்ல வேண்டிய தருணம் வந்துவிட்டது.
அரசன் தனது சிறந்த வில்வித்தைக்காரனை அழைத்தார்.
அந்த ராஸ்கல் எனது சிறந்த குதிரைகளெல்லாவற்றையும் கொன்று தின்று விடுகிறானே! அவனைக் கொன்றுவிடு!
மறுநாள்; குதிரைகள் நிற்கும் வரிசைப் பக்கமாகவுள்ள கோபுரமொன்றின் மேலாக வில்லாளி நிலையெடுத்து நின்றான்.
சிங்கம் உள்வந்தவுடன்விரைந்து செயற்பட ஆரம்பிக்கலாம்!
அது தன் சுமையோடு வரும்போதே இலக்காக்கி விடுகிறேன்.
வழமை போல் வந்த சிங்கம் குதிரையொன்றைக் கொன்றது.
அதன் வேகம் குதிரையின் பாரத்தினால் தடங்கலை உண்டுபண்ணமுடியு மென்பதறிந்து வில்லாளி காத்திருந்தான்.
ர்ர்ர்... கர்ர்ர்... கர்ர்ர்... குறிதவறாது அவன் எய்த அம்பு ஜம்புவைக் காயப்படுத்தியது.
வேதனையிகுதியால் கர்ச்சித்துக்கொண்டிருந்த சிங்கம், கிரியை அழைத்தது. ஆனால்...
ஒகோ - ஜம்பு பிடிபட்டுவிட்டாரே. என்னை நான் காப்பாற்ற வேண்டுமே!
கிரி ஓடித் தப்பிவிடத் தயாரானது.
முடமாக்கப்பட்டுவிட்ட சிங்கத்தினால் வீடு திரும்ப முடியாது போனது. அதற்கு வேதனை அதிகரிக்கவே வீழ்ந்து மடிந்தது.
அதனது தந்தை துக்கத்திலாழ்ந்தது.
அதனாலும் என்னதான் செய்ய முடியும்? கிரி என்ற துஷ்டனைப் பின்பற்றி நடந்து கொண்டதன் விளைவு... சிங்கம் தன் சாவை அரவணைக்க நேர்ந்தது.

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

அதிகாரம் மனிதனைக் கெடுப்பதில்லை. முட்டாள் மனிதன் பதவிக்கு வந்தால் அவனே அதிகாரத்தைக் கெடுக்கிறான்.

-யாரோ-

## நமது நோக்கு

# இரத்தினச் சுருக்கமான விளக்கம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும் எனக்கோரி உயர்கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம் என்ற அமைப்பு அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

தேர்தலில் தமிழ் மக்கள் தாங்கள் வாக்களிப்பதா? அல்லது தேர்தலை பகிஷ்கரித்து நிராகரிப்பதா? என்பதை முடிவு செய்யும் சுதந்திரம் அவர்களுக்கே உரியதென தமிழர் தலைமை ஏற்கனவே தெளிவாகச் சொல்லியுள்ள நிலையில் - தேர்தல் குறித்தும், அதன் பிரதான வேட்பாளர்கள் குறித்தும், அவர்களின் சமகால பிரசார உத்திகள் மற்றும் வாக்குறுதிகள் குறித்தும் வடக்கு - கிழக்குவாழ் தமிழ் பேசும் மக்களை சிந்திக்க வைக்கும் நோக்கில், பல்வேறு அரசியல் மற்றும் சமூக அமைப்புக்கள் வெளியிடும் பிரசாரங்கள் வெளிவரத்தொடங்கியுள்ளன.

உண்மையில் தேர்தலை நிராகரிப்பதா? அல்லது தேர்தலில் வாக்களிப்பதா என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும் என்ற நிலைப்பாடு ஜனநாயக ரீதியிலான சரியான அணுகுமுறையாக இருந்தாலும் கூட, ஜனநாயகப் பண்புகள் பேணப்படும் நாட்டில் மட்டுமே அது பொருத்தமானதாக இருக்கும் என்பதைப் புரிந்துகொள்ளுதல் அவசியமாகும்.

இலங்கையை ஒரு ஜனநாயக நாடென இன்றைய சூழலில் எவரும் ஒப்புக்கொள்ள முடியாது. சுதந்திரமடைந்த காலம் முதல் இன்றுவரை இலங்கையில் ஜனநாயகம் என்ற பெயரில் பௌத்த சிங்களப் பேரினவாத சர்வதிகாரம் என்பது மூர்க்கத்தனத்துடன் வளர்ந்துவந்துள்ளதென்பதே உண்மையாகும்.

கடந்த நான்கு தசாப்தகாலமாக சிங்களப் பேரினவாத தலைமைகள் தமிழ்த் தேசிய இனத்தை வந்தேறு குடிகளாகவே மதிப்பீடு செய்து, அவர்களை தேசியத் தனித்துவம் அற்றவர்களாகவும், பாரம்பரிய வாழ் நில உரிமையற்றவர்களாகவும் ஒதுக்கி அடக்கி வைப்பதையே இலக்காகக் கொண்டு அரசியல் யாப்பின் அடிப்படையில் அவர்களது அடிப்படை மனித உரிமைகளைக் கூட மறுத்து நிராகரிக்கும் மேலாதிக்கத் திமிருடன் செயற்பட்டு வந்ததன் விளைவையே இப்போது அறுவடை செய்து கொண்டிருந்தாலும் கூட, இன்னமும் அவர்கள் பட்டறிவுப் பாடம் எதனையும் கற்றுணர்ந்ததாக இல்லை.

சமாதானப் போர்வை போர்த்தபடி அரச பயங்கரவாதமானது தமிழ் பேசும் மக்கள் மீதான ஆயுதமுனையிலான அடக்கு முறையை தொடர்ந்தும் கைக்கொள்வதையே விரும்புகின்றது என்ற செய்தியையே ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல்கால உரைகள், அறிக்கைகள, வாக்குறுதிகள் போன்ற அனைத்தும் மிகவும் தெட்டத் தெளிவாக உணர்த்தி நிற்கின்றன. இந்த நிலையில் இந்த ஜனாதிபதி வேட்பாளர்கள் தமிழ் பேசும் மக்களிடம் சமாதானத்தின் பேராலும், அரசியல் தீர்வின் பேராலும் வாக்குக் கோருவதைவிட கோமாளித்தனம் எதுவுமில்லை.

அவர்களின் வாக்குறுதிகளை நம்பி தமிழ்மக்கள் வாக்களிப்பதும் அந்தக் கோமாளித்தனத்தைவிடவும் மோசமான ஏமாளித்தனமாகும்.

இது தமிழ் மக்களின் வாக்களிக்கும் உரிமையைத் தடுப்பதற்கான வார்த்தைகள் அல்ல. வாக்களித்தலின் பின்னரான பெறுபேறுகள் குறித்து சிந்திக்க வைப்பதற்கான கருத்துக்களே ஆகும்.

இந்தத் தேர்தலில் வெற்றிபெறப்போகும் நபர் இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் போகிறார் என்பதும், அவர் பௌத்த சிங்கள பேரினவாதக் கட்சி ஒன்றின் பிரதிநிதியாகவே தேர்தலில் போட்டியிடுகிறார் என்பதும், அவரும் அவர் சார்ந்த கட்சியும் கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கு எதிரான இராணுவ ரீதியிலான ஒடுக்குமுறைகள் அனைத்தையும் கைகட்டிப் பார்த்தும், கைதட்டி ரசித்தும் கொண்டிருந்தவர்தான் என்பதும் சொல்லித் தெரியவேண்டிய விடயமேயல்ல.

ஜனாதிபதியாக ரணில் வந்தாலும் சரி, ராஜபக்ஷ வந்தாலும் சரி இருவருமே தமிழ் மக்களுக்கான உரிமை தொடர்பான விடயங்களில் நேர்மையாக, ஆத்மார்த்தமாகச் செயற்பட்டவர்களும் அல்ல. இனிமேல் செயற்படப்போகின்றவர்களுமல்ல என்பதற்கு அவர்களின் பதவிக்கால அரசியல் நகர்வுகளே ஆதாரங்கள் ஆகும்.

இந்த நிலையில் உயர்கல்வி நிறுவனங்களின் மாணவர் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக தமிழ் பேசும் மக்கள் சற்று தீவிரமாகச் சிந்திப்பது தவிர்க்கமுடியாத ஒன்றாகவே இருக்கும்.

குறிப்பாக இந்த அறிக்கையின் இறுதியில் மகிந்த ரணில் இருவருமே கோழி பிடிப்பவர்கள்தான். மகிந்தவுடன் ஜே.வி.பியினரும், காவியுடையினரும் கதறக்கதற துரத்திப் பிடிப்பார்கள். ஆனால், ரணில் விக்கிரமசிங்கவோ ஈரச் சாக்குப் போட்டு சத்தம்போடாமல் பிடிப்பார் எனக் குறிப்பிட்டவரிகள் நகைச்சுவையாக இருந்தாலும் அதன் உள்ளீடான அர்த்தம் ஆழமானது. சிந்திக்கவேண்டியது.

தேர்தலில் ஜனாதிபதிக் கதிரையைக் கைப்பற்றப் போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள் குறித்த இரத்தினச் சுருக்கமான விளக்கமாகவும் இது இருப்பதை இருவரது கடந்தகால அரசியல் குறித்து அறிந்தோர் நன்கு அறியவே செய்வர்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி' யார் பார்வையில்...

# "அத்தைக்கு மீசை முளைத்து சித்தப்பனாக்கும்" வாக்குறுதிகள்!

"அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பன்" என்றொரு பழமொழி இந்தியாவில் புழக்கத்திலிருந்துவருகிறது. இங்கு இப்பொழுது தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் மஹிந்த ராஜபக்ஷவும், ரணில் விக்கிரமசிங்கவும் பேசும் பேச்சுக்களும், அள்ளிக்கொட்டும் வாக்குறுதிகளும் நான் முதலில் சொன்ன பழமொழியைத்தான் நினைவூட்டுகிறது என்று சொல்லிக் கொண்டு வந்தார் நண்பர் பரமசிவம்.

பொதுவாகச் சொன்னாலும் குறிப்பாக ரணில் விக்கிரமசிங்க வடக்குக்கிழக்கில் போதிய அதிகாரங்களுடைய பிராந்திய சபையை சுதந்திரக்கட்சியுடன் சேர்ந்து அமைப்பதற்கான திட்டம் பற்றிச் சொல்லியிருப்பதைச் சொல்லுகிறீர் என்று நினைக்கிறேன்.

சரிதானே என்று கேட்டேன்.

நீர் நினைத்ததில் தவறில்லை. ஒற்றையாட்சி அமைப்பில் தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று தமது சிந்தனையில் மஹிந்த தெரிவித்திருந்தாலும் அதிகாரப்பரவலாக்கல் பற்றியும் சகலருக்கும் சமவாய்ப்பு, சமஉரிமை என்றெல்லாம் மஹிந்த பேசிவருகிறார். இருவரும் கொடுக்கும் வாக்குறுதிகளை எப்படி நிறைவேற்றுவார்கள் என்பதுதான் புரியவில்லை. தேர்தல் வாக்குறுதிகள் என்றால் அவை நிறைவேற்றப் படவேண்டுமென்ற அவசியமில்லைப்போலும். நாட்டின் இறைமை பாதுகாக்கப்பட்டு அதற்கு அமைவாக, வடக்கு கிழக்கில் பிராந்திய சபையொன்றுக்கு போதிய அதிகாரங்களைப் பெற்றுக் கொடுக்கும் அரசியல் தீர்வொன்றை இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து முன்வைக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்திருக்கும் ரணில் விக்கிரமசிங்க, பிரதான கட்சிகளிரண்டும் ஒன்றுபடாமல் தீர்வொன்றை எட்டுவது மிகக் கடினமானதெனவும், சுட்டிக்காட்டியிருக்கிறார் என்று பரமசிவம் சொன்னார்.

இதெல்லாம் கூட்டங்களில் பேசுவதற்கும், கேட்பதற்கும், பத்திரிகைகளில் படிப்பதற்கும் நன்றாகத்தானிருக்கும். கடந்தகால வரலாறுகளைப் பார்த்தால் இது ஒரு போதும் நடைமுறையில் சாத்தியப்படும் என்று எண்ணுவதற்கே இடமில்லை என்றேன் நான்.

நீர் சொல்வதில் நியாயமிருக்கிறது. வடக்குக் கிழக்கில் பிரதேச சபைகள் அமைத்து அதிகாரங்கள் சிலவற்றை வடக்குக் கிழக்குத் தாயக மக்களான தமிழ் பேசும் மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கு வழி செய்யும் பிரதேச சபைகள் அமைப்பதற்கு தந்தை செல்வநாயகத்துடன் 1956இல் மொழி வெறியைக் கிளப்பி ஆட்சிக்கு வந்த அன்றையப் பிரதமர் பண்டாரநாயக்க ஒப்பந்தம் செய்தார். இதை இன்றைய ரணிலின் அரசியல் குருவான ஜே.ஆர்.ஜெயவர்த்தன கண்டி யாத்திரை சென்று எதிர்த்தார். ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. பின்னர் அதே யானைக் கட்சியுடன் தந்தை செல்வா மாவட்ட சபைகள் அமைக்க இரகசிய ஒப்பந்தம் செய்தார். இதற்கு சிவப்புச் சட்டை சமசமாஜக் கட்சித் தலைவர் என்.எம்.பெரேரா எதிர்ப்பத் தெரிவித்து அம்பலப்படுத்தினார். இதன் பின்னணியிலும் ஜே.ஆர்.இருந்தார்.

சிவப்பு, பச்சை, நீலம் என்று அவர்கள் பிரிந்து தங்கள் அதிகாரத் தலைமைக்குப் போட்டிபோட்டாலும் தமிழ் மக்களுக்கு அதிகாரத்தில் ஒரு துளியாவது அவர்களுக்கு வழங்குவதற்கு எவர் முன்வந்தாலும் எதிர்த்துப் போராடி இல்லாமல் செய்வதில் அவர்கள் ஒன்றுபட்டுவிடுவார்கள்.

1956 ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் மசோதாவைப் பண்டாரநாயக்க கொண்டுவந்தபோது - வடக்குக் கிழக்குத் தாயகத்திலிருந்து நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி, தமிழ்க் காங்கிரஸ், கம்யூனிஸ்ட், சுயேச்சைகள் என்று அனைத்துத் தமிழ் பேசும் பிரதிநிதிகளும் ஒன்று சேர்ந்து ஒரே குரலில் எதிர்த்துப்பேசி எதிர்த்து வாக்களித்தனர்.

இந்தச் சமயம் இடதுசாரிகளும்கூட தமிழ்பேசும் பிரதிநிதிகளுடன் சேர்ந்து சிங்களம் மட்டும் மசோதாவை எதிர்த்து வாக்களித்தனர். அந்தச் சமயம் நாடாளுமன்றத்துக்கு எட்டே எட்டுப்பேருடன் வந்த ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையில் மக்கள் ஐக்கிய முன்னணியாக இருந்த கூட்டமைப்புடன் சேர்ந்து சிங்களம் மட்டும் மசோதாவை சட்டமாக்குவதற்கு வாக்களித்தது.

இப்போது ஜனாதிபதித் தேர்தலில் இருதுருவங்களாக நின்று கூச்சலிட்டுப் போட்டியிடும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக்கட்சியும் நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்ட அமுலை மேலும் ஒரு மாதம் நீடிப்பதற்குச் சேர்ந்தே வாக்களித்திருக்கின்றன.

இந்த அவசரகாலச்சட்டத்தினால் நாளும் பொழுதும் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவதும், கடத்தப்படுவதும், தேடுதல் நடவடிக்கைகளும், சோதனைகளும் தமிழ் மக்களைத்தான் பெரும் சோதனைக்குள்ளாக்கியிருக்கிறது. இரவில் தமிழ் இளைஞர்கள் கொழும்பில் மட்டுமல்ல எந்த இடத்திலும் நிம்மதியாக நித்திரை செய்ய முடியவில்லை.

பகலில் பயமில்லாமல் நடமாட முடியவில்லை. இந்த நிலையில் இவர்களைப்பற்றி இந்த் அரசியல்வாதிகளும், ஆட்சிபீடத்துக்குப்போட்டியிடும் கட்சி வேட்பாளர்களும், அவர்களின் எடுபிடிகளும் கிஞ்சித்தும் கவலைப்படுவதாக இல்லை. இவர்கள்தான் தாங்கள் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் போதிய அதிகாரங்களுடன் பிராந்திய சபைகள் அமைத்து சுதந்திரமாக வாழவழிவகுப்பதாக ஒருவர் சொல்கிறார். மற்றவர் எந்தவித பாகுபாடுமல்லாமல் தமிழ் முஸ்லிம் மக்கள் சிங்களவர்களுடன் சமமாக வாழவழி வகுக்கப்போவதாக சொல்கிறார் என்று பரமசிவம் சொன்னார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழர்தாயக தமிழ் முஸ்லிம் மக்களுக்கு வெளிநாடுகள் மனமிரங்கிக் கொடுத்த நிவாரண உதவிகளை அவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுப்பதற்கு அரசும் சேர்ந்து பொதுக்கட்டமைப்பு ஒன்றை அமைப்பதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்கள் நடத்தினவர்கள்.

பின்னர் கட்டமைப்பு அமைப்பதற்கு ஒப்புக்கொண்டு அதில் கையெழுத்திட்டபின்னரும் அதைச் செயற்படவிடாமல் நீதிமன்றில் இடைக்காலத் தடையுத்தரவு பெற்றவர்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் பிரதமருடன் பொதுக்கட்டமைப்பையே கலைப்பதற்கு ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். தமிழ் பேசும் மக்களுக்குத் தாயகம் ஒன்று இல்லையென்றும், அவர்களுக்கு சுயநிர்ணய உரிமையோ எதுவுமே இல்லையென்றும் அவர்கள் ஒப்பந்தம் செய்துகொள்கிறார்கள்.

இவர்களுடன் ஒப்பந்தம் செய்தவர்கள்தான் இதற்கு முன்பு இலங்கையில் சமாதானம் ஏற்படுவதற்கான பேச்சுவார்த்தைகளில் தமிழர் தாயகத்துக்கு தன்னாதிக்க அதிகார சபை வேண்டுமென்ற கோரிக்கையை முழுமூச்சாக எதிர்த்தவர்கள். இந்த நிலையில் இவர்களுடன் எழுதிய ஒப்பந்தம் செய்துகொண்டு இன்னொருவர் தன்னுடன் எழுதாத ஒப்பந்தம் செய்திருப்பதாகச் சொல்லித்திரியும்போது இவர் எதைத்தான் நிறைவேற்றுவார், எதைத்தான் நிறைவேற்ற முடியும்? என்று கேட்டேன்.

தமிழ் பேசும் மக்கள் சம்பந்தமாக எந்தக் கோரிக்கைக்கும், எந்த முயற்சிக்குமே விட்டுக் கொடுக்காத விடாக்கண்டர்களான இனவெறியர்களுடன் ஒப்பந்தம்செய்து ஜனாதிபதிப் பதவிக்காகப் போட்டியிடும் மஹிந்தவும் தமிழ் மக்களின் நிலைமைகளைப்பற்றி சிறிதும் சிந்திக்காமல் அவசரகாலச் சட்ட நீடிப்பில் ஒத்துழைத்து வாக்களிக்கும் ரணிலும், அவரது கட்சியும் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக பிரதேச சபைகளை எப்படி கூட்டுச்சேர்ந்து அமைக்க முடியும்? இப்படி இரு தரப்பும் தமிழ் மக்களின் நலனுக்காக ஒத்துழைக்குமானால், ஒத்துழைக்க முன்வந்தால் அது 'அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பனாகிவிடும்' என்று சொல்லி பரமசிவம் நடந்தார்.

தேர்தல் அறிக்கை ... சிலம்பு

# தேர்தல் அறிக்கைகளும் தமிழ்த் தேசியமும்




பகுதி –6

ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் அறிக்கை மிகவும் கவனமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. அதிலே சொற்கள் அவதானமாகவும், கவனமாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. சிங்கள மக்களையும், தமிழ் மக்களையும் கவர்ந்திழுக்கும் வகையில் வாக்குகளை நோக்கமாகவே வைத்து அவை எழுதப்பட்டுள்ளன. உண்மையானதும், நேர்மையானதுமான அணுகுமுறை தெளிவின்றியே காட்டப்பட்டுள்ளது.

'நாங்கள் ஒருபோதும் பிரிவினைக்கு இடமளிக்க மாட்டோம். ஐக்கிய இலங்கைக்காக அர்ப்பணிப்புடன் இருக்கிறோம். தனிநாட்டுக்குப் பதிலாக ஐக்கிய இலங்கைக்குள் சகல இணங்களாலும் ஏற்றுக் கொள்ளப்படும் தீர்வொன்றை ஆராய்வதற்காகத் தமிழீழ விடுதலைப் புலிகளை இனங்க வைக்க எம்மால் முடிந்தது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் உள்ள சரத்துக்களுக்கு ஏற்பவே அந்த இணக்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.'

இது ரணிலின் மக்கள் நிகழ்ச்சி நிரலில் கூறப்பட்டுள்ள வசனங்களாகும். புலிகளாலும், தமிழ் மக்களாலும் நிராகரிக்கப்பட்டதும், ஜே.ஆர் - ராஜீவ் ஒப்பந்தத்தால் திணிக்கப்பட்டதுமான இலங்கை - இந்திய ஒப்பந்தச் சரத்துகளுக்கு ஏற்பவே இந்த இணக்கப்பாடு என்று குறிப்பிடுகின்றார். சர்வதேச சமூகம் குறிப்பாக நோர்வேயின் சமாதான முயற்சிகள் என்று குறிப்பிடாமல், இலங்கை-இந்திய ஒப்பந்தம் என்று ரணில் கூறியது மக்களை ஏமாற்றுவதற்கான முயற்சியேயாகும்.

அத்துடன் நில்லாது ஒஸ்லோ பிரகடனம், ரோக்கியோ தீர்மானம் என்று கூறிவிடுவதுடன் நின்றுவிடுகிறார். ஒஸ்லோ பிரகடனம் எதைக் கூறுகிறது? என்ன சொல்கின்றது? என்பதைக் கூறாதும் தவிர்த்துவிடுகிறார். மக்கள் எல்லோரும் ஒஸ்லோ பிரகடனத்தை அறிந்து வைத்துள்ளார்களா? இவ்வாறு கூறித் தெளிவில்லாத ஒரு நிலையை மக்கள் மனங்களில் ஏற்படுத்துகிறார் ரணில்.

யுத்தத்தால் ஏற்படுத்தப்பட்ட அழிவுகளிலிருந்து மக்களுக்கான அவசர தேவைகளை நிறைவேற்ற ஆறு சுற்றுப் பேச்சு வார்த்தைகள் நடத்தியும் முடியாமல் போனதையும், பேச்சு வார்த்தை முடங்கிப் போனதையும் பற்றிக் கூறாமல், 'யுத்தம், சுனாமி என்பனவற்றுக்கு முகம் கொடுத்த மக்களுக்கு அபிவிருத்தி உதவிகள் சென்றடையப் புதிய வழிகளைச் தேடிச் செல்லல்' என்று தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இது இடைக்காலத் தன்னாட்சி அலகு யோசனைக்கும், சுனாமிக்குப் பின்னான மீள் கட்டுமானப் பொதுக்கட்டமைப்புக்கும் முரணான கொள்கையாகவே தென்படுகிறது. பேச்சுவார்த்தை மேசையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அமைப்புகளால் யுத்த அவலமீட்பு எதுவும் நடைமுறைப்படுத்தப்படாமல் போனதாலேயே, இடைக்காலத் தன்னாட்சி அலகுக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அந்த இடத்திலிருந்து பேச்சு வார்த்தை தொடரும் என்று கூறாது தவிர்த்துள்ளார் ரணில்.

தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ள இன்னுமொரு அம்சம் வருமாறு -

'மாவட்ட அபிவிருத்திச்சபை மூலம் வடக்கு - கிழக்குப்பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடியதாக இருந்தது. பின்னர் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தால் தீர்வுகாண முடிந்தது. ஆனால், இதனை ஒற்றுமையின்மையால் நழுவவிட்டு விட்டார்கள். எனவே, முதலில் தெற்கில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவோம். அதன் பின்னர் விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவோம்.'

இதிலே முதலில் நாங்கள் கவனிக்க வேண்டியது மாவட்ட அபிவிருத்திச் சபைகள் பற்றிய கூற்றையேயாகும். மாவட்ட அபிவிருத்திச் சபைச் சட்ட மூலம் கொண்டுவரப்பட்ட பொழுது, அதில் குறிப்பிடப்பட்டது என்னவென்றால், இந்த மாவட்ட அபிவிருத்திச் சபைக்கும், இனப்பிரச்சினைத் தீர்வுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. இது முற்றிலும் அபிவிருத்தி சம்பந்தமான சட்ட மூலமாகும் என்பதேயாகும். ஜே.ஆர் இதனை வைத்து இனப்பிரச்சினைக்கு முடிவு கட்ட நினைத்திருந்தார். அதையே அவரது வாரிசான ரணிலும் நினைவு படுத்தியிருக்கிறார். அடுத்து அவர் குறிப்பிடுவது இலங்கை-இந்திய ஒப்பந்தமாகும். இதுவும் தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படாத ஒன்றாகும். இதிலிருந்து ரணிலின் அடிமனதில் என்ன உள்ளது என்பதைப்புரிந்து கொள்ள முடியும். இதற்கு மேலும் ஒரு உதாரணத்தை அவரது தேர்தல் அறிக்கை காட்டுகிறது.

மூன்று மட்டங்களில் அதிகாரத்தைப் பரவலாக்க இந்திய முறைமையைப் பற்றிநாம் ஆழமாக ஆராய்ந்து வருகிறோம் என்று அவர் கூறுகிறார். உலகத்தில் பல்வேறு நாடுகளில், பல்வேறு வடிவங்களில் பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்பட்டிருக்கின்றன. நாம் எமது நாட்டுக்கு ஏற்றவாறு பிரச்சினையைத் தீர்ப்போம் என்று கூறியவர், இந்திய முறையை ஆழமாக ஆராய்கிறோம் என்பது எதற்காக? முழுமையான சமஷ்டி அமைப்பைக் கொண்டிராத இந்திய முறையைப் பற்றி அதிகம் அக்கறைகொள்வது எதற்காக என்ற கேள்வி எழுகிறது?

இவ்வளவுடன் நில்லாது ஏற்படுத்தப்படுகின்ற தீர்வு மக்கள் முன் வைக்கப்படும். அதை மக்கள் ஏற்றுக் கொண்டால் அதனடிப்படையில் புதிய அரசியல் யாப்புத் தயாரிக்கப்பட்டு, மக்கள் முன் மீண்டும் வைக்கப்பட்டுப் பின் நிறைவேற்றப்படும் என்கிறார். இதிலே மகிந்தவுக்கும், ரணிலுக்கும் ஓர் ஒற்றுமை காணப்படுகிறது. அதாவது - தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளை எவை என்பதைத் தீர்மானிக்கும் சக்திகளல்லர். தீர்வு எதுவாக இருந்தாலும், அதை முழு இலங்கைத்தீவு மக்களே தீர்மானிப்பார்கள். அதாவது பெரும்பான்மை இனமான சிங்கள மக்களே தீர்மானிக்கும் உரிமையுடையவர்கள் ஆவர் என்பதாகும்.

தொடரும்....

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு - 2005

## சங்கானை உதவி அரச அதிபர் பிரிவு

| | | |
|---|---|---|
| 1.யா/ச/ | 3 | திருமதி. மனோரஞ்சிதம் சங்கரபிள்ளை |
| 2.யா/ச/ | 55 | திருமதி. ஆச்சிமுத்து அருளையா |
| 3.யா/ச/ | 89 | திரு. தம்பு துரைராஜா |
| 4.யா/ச/ | 120 | திரு. சீவரத்தினம் பரந்தாமன் |
| 5.யா/ச/ | 135 | திரு. கிருஸ்ணபிள்ளை இராமச்சந்திரன் |
| 6.யா/ச/ | 137 | திரு. சரவணமுத்து கனகரத்தினம் |
| 7.யா/ச/ | 203 | திருமதி. மாக்கிறேற் அறுக்காச்சி |
| 8.யா/ச/ | 229 | திருமதி. கனகரத்தினம்மா கந்தசாமி |
| 9.யா/ச/ | 230 | திரு. சம்மந்தர் சிவகுமாரன் |
| 10.யா/ச/ | 268 | திரு. வயித்திலிங்கம் பொன்னுத்துரை |
| 11.யா/ச/ | 285 | திரு. வினாசித்தம்பி தெய்வேந்திரராசா |
| 12.யா/ச/ | 294 | திரு. செல்லையா பாலரத்தினராசா |
| 13.யா/ச/ | 369 | திருமதி. நேசம்மா சின்னத்துரை |
| 14.யா/ச/ | 397 | திருமதி. ஆரியப்பூமாலை கந்தையா |
| 15.யா/ச/ | 439 | திருமதி. மனோரஞ்சிதம் சிவசம்பு |
| 16.யா/ச/ | 441 | திருமதி. விமலராணி பரராசசிங்கம் |
| 17.யா/ச/ | 477 | திருமதி. மகேஸ்வரி மாணிக்கவாசகர் |
| 18.யா/ச/ | 501 | திருமதி. பவளரத்தினம் தம்பிராஜா |
| 19.யா/ச/ | 555 | திருமதி. மகேஸ்வரி சுபக்கின் |
| 20.யா/ச/ | 575 | திரு. பெரியான் செல்லப்பு |
| 21.யா/ச/ | 611 | திரு. கனகரத்தினம் சின்னத்தம்பி |
| 22.யா/ச/ | 612 | திரு. சின்னவி ஆறுமுகம் |
| 23.யா/ச/ | 616 | திருமதி. பொடினோனா அப்புகாமி |
| 24.யா/ச/ | 661 | திரு. வினாயகமூர்த்தி அரியநாயகம் |
| 25.யா/ச/ | 698 | திரு. கந்தையா பரமலிங்கம் |
| 26.யா/ச/ | 700 | திரு. கந்தையா பரமலிங்கம் |
| 27.யா/ச/ | 716 | திரு. சின்னத்தம்பி கனகசிங்கம் |
| 28.யா/ச/ | 728 | திரு. சபாபதிப்பிள்ளை தெட்ஷணாமூர்த்தி |
| 29.யா/ச/ | 730 | திரு. தம்பு குமாரசாமி |
| 30.யா/ச/ | 735 | திரு. டானிஸ் வீரசிங்கசிறில் |
| 31.யா/ச/ | 737 | திரு. சின்னப்பு நல்லையா |
| 32.யா/ச/ | 756 | திரு. செல்லையா செல்வராசா |
| 33.யா/ச/ | 768 | திருமதி. நாகேஸ்வரி வேல்முருகன் |
| 34.…/ச/ | 775 | திரு. முருகர் பாலசிங்கம் |
| 35.யா/ச/ | 806 | திருமதி. பரமேஸ்வரி பஞ்சாட்சரம் |
| 36.யா/ச/ | 808 | திருமதி. தங்கரத்தினம் நவரத்தினமா |
| 37.யா/ச/ | 819 | திருமதி. இலட்சுமி நவரத்தினம் |
| 38.யா/ச/ | 823 | திரு. செல்லையா உமாபதி |
| 39.யா/ச/ | 841 | திரு. நாகலிங்கம் கனகரத்தினம் |
| 40.யா/ச/ | 845 | திரு. சின்னத்தம்பி நடராசா |
| 41.யா/ச/ | 862 | திருமதி. கனகமணி நவரட்ணம் |
| 42.யா/ச/ | 902 | திரு. சின்னப்பொடி இரத்தினம் |
| 43.யா/ச/ | 919 | திருமதி. கிருஸ்ணாம்பிகை நடராஜா |
| 44.யா/ச/ | 929 | திருமதி. கனகம்மா செல்லத்துரை |
| 45.யா/ச/ | 955 | திருமதி. பத்மாவதி குணசிங்கம் |
| 46.யா/ச/ | 957 | திரு. சிவசுந்தரம் கனகரத்தினம் |
| 47.யா/ச/ | 1002 | திரு. சிவகுருநாதன் அருட்பிரகாசம் |
| 48.யா/ச/ | 1022 | திரு. இராசரத்தினம் சிவபுரநாதர் |
| 49.யா/ச/ | 1029 | திரு. சிற்றம்பலம் தியாகராசா |
| 50.யா/ச/ | 1052 | திரு. தம்பையா நித்தியரட்ணம் |
| 51.யா/ச/ | 1070 | திரு. தில்லையம்பலம் கதிரவேற்பிள்ளை |
| 52.யா/ச/ | 1076 | திரு. முத்தையா தங்கராசா |
| 53.யா/ச/ | 1090 | திருமதி. சிவபாக்கியம் பொன்னையா |
| 54.யா/ச/ | 1136 | திருமதி. நேசமலர் திருநாவுக்கரசு |
| 55.யா/ச/ | 1144 | திரு. கந்தசாமி நவரத்தினம் |
| 56.யா/ச/ | 1150 | திருமதி. நாகரத்தினம்மா கனகரத்தினம் |
| 57.யா/ச/ | 1166 | திருமதி. சறோஜா இராசலிங்கம் |
| 58.யா/ச/ | 1167 | திருமதி. செல்லம்மா இரத்தினசிங்கம் |
| 59.யா/ச/ | 1196 | திரு. விசுவலிங்கம் சரவணபவன் |
| 60.யா/ச/ | 1207 | திரு. நாகலிங்கம் சிவசுப்பிரமணியம் |
| 61.யா/ச/ | 1274 | திரு. கனகசுந்தரம் தேவதாசன் |
| 62.யா/ச/ | 1285 | திருமதி. மனோரஞ்சிதம் வேலுப்பிள்ளை |
| 63.யா/ச/ | 1300 | திரு. தர்மசுதந்தரன் குலத்துங்கம் |
| 64.யா/ச/ | 1304 | திருமதி. பரமேஸ்வரி பொன்னையா |
| 65.யா/ச/ | 1368 | திருமதி. இராஜேஸ்வரி கனகரத்தினம் |
| 66.யா/ச/ | 1385 | திருமதி. நீலாம்பிகை வினாயகமூர்த்தி |
| 67.யா/ச/ | 1407 | திரு. இராசசுந்தரம் அனாதரட்சகன் |
| 68.யா/ச/ | 1425 | திருமதி.மனோன்மணி வேலாயுதம்பிள்ளை |
| 69.யா/ச/ | 1439 | செல்வி. ஸ்ரெலா செல்வமணி செல்லத்துரை |
| 70.யா/ச/ | 1453 | திரு. செல்லத்துரை தருமலிங்கம |
| 71.யா/ச/ | 1459 | திருமதி. மரகதம் நடராசா |
| 72.யா/ச/ | 1463 | திருமதி. பதுமநிதி சோமலிங்கம் |
| 73.யா/ச/ | 1487 | திருமதி. மகேஸ்வரிதேவி கதிர்காமராசா |
| 74.யா/ச/ | 1523 | திருமதி. செல்லம்மா ஆறுமுகம் |
| 75.யா/ச/ | 1526 | திரு. சதாசிவம் கலியுகவரதன் |
| 76.யா/ச/ | 1543 | திரு. கார்த்திகேசு சிதம்பரநாதன் |
| 77.யா/ச/ | 1544 | திரு. கணபதிப்பிள்ளை நாகலிங்கம் |
| 78யா/ச/ | 1561 | திருமதி. தனலட்சுமி சண்முகநாதன் |
| 79.யா/ச/ | 1591 | திரு. தம்பு துரைச்சாமி |
| 80.யா/ச/ | 1651 | திரு. கதிரவேலு மகாதேவா |
| 81.யா/ச/ | 1667 | திருமதி. கனகாம்பிகை மயில்வாகனம் |
| 82.யா/ச/ | 1715 | திரு. குமாரவேலு சுந்தரம்பிள்ளை |
| 83.யா/ச/ | 1718 | திருமதி. நாகம்மா நன்னித்தம்பி |
| 84.யா/ச/ | 1767 | திரு. நடராசா சிவானந்தன் |
| 85.யா/ச/ | 1784 | திரு. நாகலிங்கம் வீரசிங்கம் |
| 86.யா/ச/ | 1795 | திரு. சரவணமுத்து குமாரவேல் |
| 87.யா/ச/ | 1880 | திரு. இராமநாதர் சோதிலிங்கம் |
| 88.யா/ச/ | 1898 | திருமதி. நாகம்மா இராசா |
| 89.யா/ச/ | 1923 | திருமதி. மகேஸ்வரி வேலுப்பிள்ளை |
| 90.யா/ச/ | 1949 | திருமதி. சரஸ்வதி சுப்பிரமணியம் |
| 91.யா/ச/ | 1956 | திருமதி. பூரணம் நடராசா |
| 92.யா/ச/ | 2008 | திருமதி. தங்கம்மா வடிவேலு |
| 93.யா/ச/ | 2015 | திருமதி. நாகம்மா ஐயாத்துரை |
| 94.யா/ச/ | 2046 | திருமதி. பொன்னம்மா கந்தையா |
| 95.யா/ச/ | 2066 | திருமதி. லட்சுமியார் சபாரத்தினம் |
| 96.யா/ச/ | 2087 | திரு. ஆறுமுகம் பாலகிருஷ்ணன் |
| 97.யா/ச/ | 2092 | திரு. ஆறுமுகம் நடராசா |
| 98.யா/ச/ | 2106 | திருமதி. செல்லாச்சி கிருஷ்ணர் |
| 99.யா/ச/ | 2114 | திரு. சதாசிவம் கணேசன் |
| 100.யா/ச/ | 2146 | திரு. கணபதிப்பிள்ளை சரவணமுத்து |
| 101.யா/ச/ | 2154 | திரு. கனகரத்தினம் பரமசிவம் |
| 102.யா/ச/ | 2162 | திருமதி. ஞானாம்பிகை குருநாதப்பிள்ளை |
| 103.யா/ச/ | 2190 | திருமதி. பறுவதம் கதிரவேலு |
| 104.யா/ச/ | 2201 | திருமதி. சரஸ்வதியம்மா வரதராஜா |
| 105.யா/ச/ | 2212 | திரு. நாகர் காசிப்பிள்ளை |
| 106.யா/ச/ | 2230 | திருமதி. தங்கம்மா கணேசன் |
| 107.யா/ச/ | 2274 | திரு. முருகேசு சண்முகநாதன் |
| 108.யா/ச/ | 2284 | திருமதி. சுகிர்தமலர் பரமசாமி |
| 109.யா/ச/ | 2293 | திருமதி. ஞானேஸ்வரி தெய்வேந்திரநாதன |
| 110.யா/ச/ | 2310 | திரு. துரையப்பா நவரத்தினம் |
| 111.யா/ச/ | 2322 | திருமதி. கனகபூஷனம் சுப்பையா |
| 112.யா/ச/ | 2326 | திருமதி. பராசக்தி குருபரன் |
| 113.யா/ச/ | 2330 | திரு. கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன் |
| 114.யா/ச/ | 2345 | திரு. மாதவர் கோவிந்தர் |
| 115.யா/ச/ | 2371 | திருமதி. இராமலிங்கம் சிவகாமன் |
| 116.யா/ச/ | 2386 | திருமதி. விமலா சிவசற்குணனந்தன் |
| 117.யா/ச/ | 2392 | திருமதி. திலகஞானம் ராஜேஸ்வரன் |
| 118.யா/ச/ | 2479 | திரு. பொன்னையா குலவீரசிங்கம் |
| 119.யா/ச/ | 2481 | திருமதி. மங்கையற்கரசி சண்முகராசா |
| 120.யா/ச/ | 2547 | திருமதி. நாகம்மா துரை |
| 121.யா/ச/ | 2651 | திரு. வேலுப்பிள்ளை நமசிவாயம் |
| 122.யா/ச/ | 2662 | திருமதி. யோகேஸ்வரி துரைராஜா |
| 123.யா/ச/ | 2702 | திரு. கந்தர் மாணிக்கம் |
| 124.யா/ச/ | 2714 | திரு. சின்னையா சோமசுந்தரம் |
| 125.யா/ச/ | 2726 | திருமதி. முத்துநாயகி இரத்தினசபாபதி |
| 126.யா/ச/ | 2758 | திருமதி. பூபதி இராசலிங்கம் |
| 127.யா/ச/ | 2787 | திரு. சுந்தரம் சுப்பிரமணியம் |
| 128.யா/ச/ | 2789 | திரு. முத்துக்குமாரு குழந்தைவேலு |
| 129.யா/ச/ | 2861 | திரு. ஆறுமுகம் குருலிங்கம் |
| 130.யா/ச/ | 2862 | திருமதி. பேரின்பவல்லி சரவணமுத்து |
| 131.யா/ச/ | 2869 | திரு. காசிப்பிள்ளை பொன்னுத்துரை |
| 132.யா/ச/ | 2918 | திருமதி. இராசலட்சுமி சண்முகநாதன் |
| 133.யா/ச/ | 2920 | திரு. சுப்பிரமணியம் தியாகராசா |
| 134.யா/ச/ | 2991 | திரு. வினாசித்தம்பி வேலுப்பிள்ளை |
| 135.யா/ச/ | 3034 | திருமதி. மனோன்மணி பாலசிங்கம் |
| 136.யா/ச/ | 3055 | திரு. கந்தையா கதிரவேல் ஐயா |
| 137.யா/ச/ | 3058 | திருமதி. பரமேஸ்வரி கனகரத்தினம் |
| 138.யா/ச/ | 3083 | திருமதி. சிந்தாமணி சின்னத்துரை |
| 139.யா/ச/ | 3105 | திருமதி. வேதமணி கோபாலகிருஷ்ணன் |
| 140.யா/ச/ | 3112 | திருமதி. தேவநாயகி இராசையா |
| 141.யா/ச/ | 3117 | திரு. கந்தையா சுப்பிரமணியம் |
| 142.யா/ச/ | 3146 | திரு. சுப்பிரமணியம் தர்மலிங்கம் |
| 143.யா/ச/ | 3154 | திருமதி. பாக்கியம் சின்னவன் |
| 144.யா/ச/ | 3194 | திருமதி. இராசாம்பிகை தில்லையம்பலம் |
| 145.யா/ச/ | 3201 | திருமதி. திரவியம் ஆலாலசுந்தரம் |
| 146.யா/ச/ | 3202 | திரு. வேலுப்பிள்ளை மயில்வாகனம் |
| 147.யா/ச/ | 3203 | திருமதி. தேம்பாமலர் காசிப்பிள்ளை |
| 148.யா/ச/ | 3214 | திருமதி. திருமகள் கனகரத்தினம் |
| 149.யா/ச/ | 3261 | திருமதி. கருணாநிதி இரத்தினராசா |
| 150.யா/ச/ | 3304 | திருமதி. இரத்தினேஸ்வரி கந்தையா |
| 151.யா/ச/ | 3308 | திருமதி. நாகம்மா நடராசா |
| 152.யா/ச/ | 3317 | திரு. அருணாசலம் இராமசாமி |
| 153.யா/ச/ | 3320 | திருமதி. சின்னம்மா கந்தசாமி |
| 154.யா/ச/ | 3329 | திரு. நல்லதம்பி சீவரத்தினம் |
| 155.யா/ச/ | 3331 | திரு. சுப்பையா செல்வநாயகம் |
| 156.யா/ச/ | 3393 | திரு. கிருஷ்ணர் இராசையா |
| 157.யா/ச/ | 3416 | திருமதி. மாரிமுத்து தம்பிராசா |
| 158.யா/ச/ | 3419 | திரு. இலங்கநாதன் கந்தசாமி |
| 159.யா/ச/ | 3422 | திரு. பொன்னுச்சாமி தருமலிங்கம் |
| 160.யா/ச/ | 3430 | திருமதி. பாக்கியம் செல்வராசா |
| 161.யா/ச/ | 3486 | திருமதி. விசாகபூசணி முருகையா |
| 162.யா/ச/ | 3502 | திருமதி. அன்னபூரணம் கந்தசாமி |
| 163.யா/ச/ | 3559 | திரு. துரைச்சாமி வாமதேவன் |
| 164.யா/ச/ | 3646 | திருமதி. தனலட்சுமி பரராசசிங்கம் |
| 165.யா/ச/ | 3662 | திரு. செல்லையா வைரமுத்து |
| 166.யா/ச/ | 3670 | திரு. நாகலிங்கம் கந்தையா |
| 167.யா/ச/ | 3750 | திருமதி. பரமேஸ்வரி சிவப்பிரகாசம் |
| 168.யா/ச/ | 3760 | திரு. வைத்திலிங்கம் பழனித்துரை |
| 169.யா/ச/ | 3778 | திரு. சபாபதிப்பிள்ளை இராஜகோபால் |
| 170.யா/ச/ | 3804 | திரு. சின்னத்தம்பி வினாயகமூர்த்தி |
| 171.யா/ச/ | 3805 | திரு. பொன்னையா கனகரத்தினம் |
| 172.யா/ச/ | 3806 | திரு. சின்னத்தம்பி வினாயகமூர்த்தி |
| 173.யா/ச/ | 3873 | திருமதி. புஸ்பராணி தியாகராஜா |
| 174.யா/ச/ | 3882 | திரு. துரையப்பா பரமசிவம் |
| 175.யா/ச/ | 3895 | திரு. தம்பு சோமலிங்கம் |
| 176.யா/ச/ | 3918 | திரு.சிவானந்தகுருக்கள் சுப்பிரமணியசர்மா |
| 177.யா/ச/ | 3947 | திருமதி. முத்துமாலை சின்னையா |
| 178.யா/ச/ | 3966 | திரு. மார்க்கண்டு பேராயிரவன் |
| 179.யா/ச/ | 3986 | திருமதி. இலட்சுமி கணபதிப்பிள்ளை |
| 180.யா/ச/ | 4020 | திருமதி. செல்லம் வைத்திலிங்கம் |
| 181.யா/ச/ | 4059 | திரு. ஆறுமுகம் வைரமுத்து |
| 182.யா/ச/ | 4062 | திரு. சுப்பிரமணியம் தர்மலிங்கம் |
| 183.யா/ச/ | 4071 | திருமதி. செல்வராணி தாமோதரம்பிள்ளை |
| 184.யா/ச/ | 4174 | திரு. இராமலிங்கம் துரைசிங்கம் |
| 185.யா/ச/ | 4193 | திரு. சண்முகம் சிவதாசன் |
| 186.யா/ச/ | 4212 | திருமதி. சிவபாக்கியம் கணபதிப்பிள்ளை |
| 187.யா/ச/ | 4223 | திருமதி. செல்வம் குமாரதாசன் |
| 188.யா/ச/ | 4237 | திருமதி. பாக்கியம் செல்லத்துரை |
| 189.யா/ச/ | 4257 | திருமதி. தங்கரத்தினம் சிவஞானம் |
| 190.யா/ச/ | 4270 | செல்வன். செல்லத்துரை பரணிதரன் |
| 191.யா/ச/ | 4283 | திருமதி. சிவகங்கை நவரத்தினம் |
| 192.யா/ச/ | 4301 | திரு. பொன்னையா சுப்பிரமணியம் |
| 193.யா/ச/ | 4303 | திருமதி. நவரத்தினம் கணேஸ் |
| 194.யா/ச/ | 4342 | திரு. முத்துவேலு சண்முகநாதன் |
| 195.யா/ச/ | 4346 | செல்வி. கலாநாயகி சண்முகநாதன் |
| 196.யா/ச/ | 4347 | திருமதி. தெய்வானை மாரிமுத்து |
| 197.யா/ச/ | 4394 | திருமதி. மேரி திரவியராசா |
| 198.யா/ச/ | 4402 | திரு. ஆறுப்பிள்ளை இராஜநாயகம் |
| 199.யா/ச/ | 4419 | திருமதி. சிவபாக்கியம் பொன்னையா |
| 200.யா/ச/ | 4424 | திருமதி. சிவனேஸ்வரி சோமசுந்தரம் |
| 201.யா/ச/ | 4437 | திரு. மாதவன் சிவசுப்பிரமணியம் |
| 202.யா/ச/ | 4499 | திருமதி. பஞ்சநாயகி முருகுப்பிள்ளை |
| 203.யா/ச/ | 4511 | திரு. கதிர்காமு சிவஞானமூர்த்தி |
| 204.யா/ச/ | 4515 | திரு. சங்கரப்பிள்ளை கணேசன் |
| 205.யா/ச/ | 4551 | திரு. கந்தையா தங்கரத்தினம் |
| 206.யா/ச/ | 4573 | திருமதி. சத்தியபவானியம்மா தங்கராசிங்கம் |
| 207.யா/ச/ | 4579 | திரு. சிதம்பரப்பிள்ளை முருகவேல் |
| 208.யா/ச/ | 4587 | திருமதி. சரஸ்வதிதேவி நாகரத்தினம் |
| 209.யா/ச/ | 4608 | திருமதி. தங்கச்சிப்பிள்ளை கனகராயன் |
| 210.யா/ச/ | 4637 | திரு. கதிர்காமு சின்னத்தம்பி |
| 211.யா/ச/ | 4689 | திரு. நமசிவாயம் வைரமுத்து |
| 212.யா/ச/ | 4691 | திரு. செல்லத்துரை புவனசுந்தரம் |
| 213.யா/ச/ | 4746 | திரு. வினாசித்தம்பி மார்க்கண்டு |
| 214.யா/ச/ | 4755 | திரு. செல்லையா குணநாயகம் |
| 215.யா/ச/ | 4762 | திருமதி. அன்னம்மா திருநாவுக்கரசு |
| 216.யா/ச/ | 4786 | திரு. கதிரவேலு அருளம்பலம் |
| 217.யா/ச/ | 4801 | திரு. சின்னவன் கதிரவேலு |
| 218.யா/ச/ | 4813 | திருமதி. சரஸ்வதி இராசதுரை |
| 219.யா/ச/ | 4817 | திருமதி. செல்லம்மா பிரான்சிஸ் |
| 220.யா/ச/ | 4821 | திருமதி. தங்கம்மா சோமசுந்தரம் |
| 221.யா/ச/ | 4827 | திரு. பொன்னையா கிருஷ்ணசாமி |
| 222.யா/ச/ | 4857 | திரு. வயித்தி கணேசு |
| 223.யா/ச/ | 4862 | திருமதி. சின்னம்மா குமாரசாமி |
| 224.யா/ச/ | 4865 | திரு. வேலாயுதர் கணபதிப்பிள்ளை |
| 225.யா/ச/ | 4866 | திரு. இளையவன் அப்பையா |
| 226.யா/ச/ | 4898 | திரு. வாரிக்குட்டி துரைராசா |
| 227.யா/ச/ | 4899 | திரு. பொன்னம்பலம் ஆறுமுகம் |
| 228.யா/ச/ | 4904 | திரு. கந்தையா வேலுப்பிள்ளை |
| 229.யா/ச/ | 4908 | திரு. கிருஷ்ணன் நடராசா |
| 230.யா/ச/ | 4917 | திருமதி. முத்தாச்சி கணபதிப்பிள்ளை |
| 231.யா/ச/ | 4927 | திரு. வையாபுரி இராமன் |
| 232.யா/ச/ | 4961 | திரு. இளயவர் செல்லப்பா |
| 233.யா/ச/ | 4983 | திரு. முதலி வயிரமுத்து |
| 234.யா/ச/ | 4991 | திரு. கோவிந்தர் கந்தசாமி |
| 235.யா/ச/ | 4993 | திருமதி. அன்னலட்சுமி முருகேசம்பிள்ளை |

(தொடரும்...)

# பயங்கரவாத எதிர்ப்பு உடன்பாடு; இலங்கை - அமெரிக்கா கைச்சாத்து!

கொழும்பு —

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் பயங்கரவாதத்துக்கு எதிரான முக்கிய உடன்படிக்கை ஒன்று நேற்றுமுன்தினம் கைச்சாத்திடப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சில் நடந்த இந்த நிகழ்வில், இலங்கையின் சார்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜவும், அமெரிக்காவின் சார்பில் இலங்கைக்கான தூதுவர் ஜெப்ரி லன்ஸ் ரீட் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

இந்த உடன்படிக்கையின் கீழ் இலங்கைக்கு அமெரிக்க அரசாங்கம் பாதுகாப்பு சம்பந்தமான உதவிகளை வழங்கும். பொலிஸ் திணைக்களத்தின் அதிகாரிகளுக்குத் தேவையான பயிற்சிகள், விஞ்ஞான தொழிநுட்ப அறிவுகளை வழங்கல், உபகரணங்களை வழங்கல் என்பன இதில் அடங்குகின்றன.

அமெரிக்க அதிகாரிகளால் பயங்கரவாதத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கையில் தற்போது இலங்கையில் இருக்கும் செயற்பாடுகள் மற்றும் நிலைமைகளை ஆராய்ந்து தேவைக்கேற்ப பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வுள்ளன.

இலங்கையில் அரச தலைவர்களுக்குப் பாதுகாப்பளித்தல் அரச சொத்துக்கள் மற்றும் அடிப்படை வசதிகளைப் பாதுகாத்தல் சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்தல் பொதுமக்களின் உயிர்களையும் உடமைகளையும் பாதுகாத்தல் இந்த உடன்படிக்கையின் நோக்கமாகும்.

# தொண்டர் நிறுவன பிரதிநிதிகள் வவுணதீவில் பொலிஸாரால் கைது

மட்டக்களப்பு —

வடக்கு - கிழக்கு கிராமிய அபிவிருத்தி சேவை நிறுவனத்தின் மட்டக்களப்பு பிரதேச முகாமையாளர் உட்பட இருவர் நேற்றுமுன்தினம் மாலை வவுணதீவு இராணுவ முன்னணி காவல்நிலைய பிரதேசத்தில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டபோது எதிர்வரும் 3 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

தமது அலுவலகத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் மட்டக்களப்பு நகரிலுள்ள வங்கியொன்றில் வைப்பிலிடுவதற்காக எடுத்துச் சென்ற ரூபா 24 லட்சத்து 55 ஆயிரம் ரூபா ரொக்கம் தொடர்பாக எழுந்த சந்தேகம் காரணமாகவே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

குறிப்பிட்ட நிறுவனம் இலங்கை அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அது தொடர்பான ஆவணங்கள் தலைமையகத்திலிருப்பதாக பொலிஸாரிடம் இவர்கள் தெரிவித்தபோதிலும் அதனை அவர்கள் நிராகரித்துள்ளனர்.

பிரதேச முகாமையாளரான யாழ்.திருநெல்வேலியைச் சேர்ந்த சணமுகநாதன் சுதந்திரன் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தரான கந்தலிங்கம் யுதா ஆகிய இருவரும் நேற்று மட்டக்களப்பு நீதிமன்றில் நீதிபதி எம்.எச்.எம்.அஜ்மீர் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்களை எதிர்வரும் 11 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸார் கோரினர்.

ஆனால் நீதிமன்றோ எதிர்வரும் 3 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைப்பதற்கான உத்தரவை நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

# சிங்கள பௌத்தப் பேரினவாதத்தை நிலைநிறுத்த ரணில் - மகிந்த முயற்சி!

## சிகை அலங்கரிப்பாளர் சங்கம்

யாழ்ப்பாணம் —

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரண்டு பிரதான வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க மற்றும் மகிந்த ராஜபக்ஷ இருவரும், சிங்கள பௌத்த பேரினவாதத்தை அரசியல், இராணுவ, சமூக, பொருளாதார அடிப்படையில் நிலைநிறுத்த வேண்டுமென்பதில் உறுதியாக உள்ளவர்கள். இதற்காக எந்த பிசாசுடனும் கூட்டுச்சேர தயாராக உள்ளனர் என்பதற்கு அவர்கள் சார்ந்துள்ள கட்சிகளது கொள்கைகளும், கடந்தகால நடைமுறைகளுமே சான்று பகர்கின்றன.

எனவே, சிங்கள தேசத்தின் அரசியல் நடைமுறைகளால் எம்மைக் கட்டுப்படுத்த முடியாது. உயர் அரசியல் உரிமைக் கோட்பாடாகிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழீழ தேசத்தின் விடுதலையே எமது இலக்கு. எனவே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிப்பதன் மூலம் சர்வதேசத்திற்கு முரசறைவோமென யாழ்.மாவட்ட சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் ஒன்றியம் ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்குமாறு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுட்டுள்ளதாவது -

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்க தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் 21 ஆம் நூற்றாண்டின் தொழில்நுட்ப அடிப்படையில் அதிநவீன படையமைப்பு வலுவாக கட்டியெழுப்பப்படும். தமிழரின் மரபுவழி பிரதேச எல்லைப்பகுதியில் குடியமர்த்தப்பட்ட சிங்களவர்களுக்கு பாதுகாப்பளிக்கும் வகையில் துணைப்படை அமைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள அதேவேளை, ஒஸ்லோவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூட்டு அறிக்கையிலுள்ள சமஷ்டிகுறித்தோ, தமிழின அழிப்பு போரினாலும் சுனாமி அனர்த்தத்தாலும் பாதிப்புக்குள்ளான தமிழருக்கு புனர்வாழ்வு அமைப்பை ஏற்படுத்துவது குறித்த எவ்வித கருத்தும் இடம்பெறவில்லை.

மஹிந்த தனது தேர்தல் அறிக்கையில் ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப் பரவலாக் கல், போர்மற்றும் சுனாமி அனர்த்த பாதிப்புக்குள்ளான தமிழருக்கு புனர்வாழ்வு அமைப்புக்கள் கிடையாது எனத் தெரிவித்துள்ளார்.

சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிலைநாட்ட ஜே.வி.பி, ஹெல உறுமய போன்ற அதி உச்ச இனவெறிக் கும்பல்களுடன் மகிந்த கூட்டணி அமைத்துள்ளார். சமாதானத் தீர்வு குறித்து சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுவதுடன், பெரும்பான் மையானோரின் முடிவே நடைமுறைப்படுத்தப்படுமென இருவரும் அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளனர்.

எனவே, வரலாற்றின் திருப்பு முனையில் நிற்கும் தமிழ்த் தேசிய இனமாகிய நாம் நீண்டகாலமாக சுதந்திரத்தையும், பாதுகாப்பையும் உறுதி செய்வதற்காக தமிழ்த் தேசியத்தை, மரபுவழித்தாயகத்தை, சுயநிர்ணய உரிமையை முன்வைத்து அனைத்து வழிமுறைகளையும் கையாண்டு பெரும் போராட்டங்கள் மூலம் உயிர் உடமைகளை விலையாக தேசிய விடுதலைக்காக கொடுத்துள்ளோம்.

இந்தநிலையில் பேரினவாத அரசியல் சித்திற்கு நாம் மசிய மாட்டோம். தமிழின அழிப்பு அரசியலாளர்களான சிங்கள பேரினவாதிகளுக்கு துணைபோகும் ஒட்டுண்ணிகளை இனங்காண்பதுடன், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை புறக்கணித்து அதனை சர்வதேச சமூகத்திற்கு முரசறைவோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உடுவே தம்மலோகதேரர் மீது அத்துரலிய தேரர் கண்டனம்!



கொழும்பு —

நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாப்பேன் என தலதா மாளிகைக்கும் சிறிமகா போதிக்கும் முன்பாக நின்று உறுதிமொழி எடுத்துக் கொண்ட உடுவேதம்மலோக தேரர் - ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிப்பதன் மூலம்தனிப்பட்ட நலன்களுக்காக அனைத்து நோக்கங்களையும் காட்டிக் கொடுத்துவிட்டாரென ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப் பினர் அத்துரலிய ரத்னதேரர் கண் டனம் தெரிவித்துள்ளார்.

உடுவே தம்மாலோக தேரர் ஜாதிக ஹெல உறுமயவின் உறுப்பினர் அல்ல. அவர் ஜாதிக ஹெல உறுமயவை விட்டு வெளியேறி ஒருவருட மாகிறது. 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கைப் பிரகடனத்தை தலதா மாளிகையில் பூஜைக்கு வைத்த வேளை நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாப்பதாக உடுவே தம்மாலோக தேரர் உறுதியளித்திருந்தார்.

எனினும், தற்போது அவை அனைத்தையும் அவர் குழிதோண்டி புதைத்துவிட்டார் என்றும் அத்துரலிய ரத்னதேரர் மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிப்பதன் மூலம் தமிழரின் நிலையை வெளிப்படுத்துவோம்!

## உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம் —

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் பகிஷ்கரித்து தமிழர் தேசம் சிங்கள தலைவர்களை இனியும் நம்பத் தயாரில்லை என்ற செய்தியை சர்வதேசத்திற்கு எடுத்துரைக்க தயாராகுமாறு யாழ்.மாவட்ட உயர்கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இது தொடர்பாக அந்த அமையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சிறிலங்காவின் ஆட்சித் தலைவருக்கான போட்டியில் 13 பேர் களத்திலுள்ள போதும் ஆட்சிக்கதிரையைப் பிடிக்கப் போகின்றவர்கள் இருவரில் ஒருவர் மட்டுமே!

இவர்களின் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வெளிப்படையாகவே பேரினவாத முகத்தை வெளிக்காட்ட வேண்டிய அவசியம் அவரின் கூட்டணித் தோழர்களால் ஏற்பட்டுள்ளது. ஒற்றையாட்சி முறை, தமிழர் தாயகமென ஒன்றில்லை, ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பொதுக்கட்டமைப்பும் நிராகரிப்பு, விடுதலை வேட்கையோடு நிற்கும் தமிழர் தேசம் மஹிந்தவின் கொள்கைகளுக்கு ஆதரவாக வாக்களிக்க முடியுமா?

சமாதானப் பிரியராகத் தன்னை காட்டிக் கொள்ளும் ரணில் - மஹிந்தவை விட மிகவும் ஆபத்தானவர். புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டவுடன் அவர் கூறினார் - புலிகளை ஆயுதம் எடுக்காமல் செய்துவிட்டோம். சிங்கள வீரனின் இறப்பைத் தடுத்துநிறுத்தியுள்ளோம். புலிகளுக்கு எதிராக சர்வதேச வலையை பின்னியுள்ளோம் இதன் விளைவுகள் போகப் போக தெரியும்.

தமிழ்மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அவர் ஒப்பந்தம் செய்யவில்லை என்பதை அவர் விரித்த சர்வதேச வலைப்பின்னல் எம்மை நெருக்கியது உண்மை. கிழக்கிலே நடந்த துர்ப்பாக்கிய சம்பவங்களும் அவர் விதித்த வலைப் பின்னலின் ஒரு அம்சமேயாகும்.

எமது தீர்க்கதரிசனமுள்ள தலைமையின் திறமையால் எமக்கு வைக்கப்பட்ட பொறிகளில் நாம் இதுவரை சிக்கவில்லை. இந்த அனுபவங்களுக்குப் பிறகும் தமிழர் தேசம் ரணிலின் கனவான் நடிப்பில் ஏமாரப்போகிறதா? நுனிப் புல் மேய்பவர் போல அரசியல் தீர்வு பற்றிப் பேசும் ரணிலின் பொருளாதார திட்டமிடல்களும் கூட எமது விடுதலைப்போரைப் பயன்படுத்தி, அதனால் விளைந்திருக்கும் சர்வதேச சூழலைப் பயன்படுத்தி மேற்கு நாடுகள் வழங்கப்போகும் உதவிகளை அடிப்படையாகக் கொண்டது மட்டுமேயாகும். அவர் தமிழர் தேசத்தை மட்டுமல்ல இலங்கைத் தீவு முழுவதையும் அந்நியர்களிடம் அடகு வைத்து விட்டே ஆட்சி நடத்துவார்.

தேசத்தின் விடிவுக்காக அளப்பரிய தியாகங்களை ஆற்றிநிற்கும் அன்புக்குரிய தமிழீழ மக்களே!

2002 பெப்ரவரி புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டகாலம் சர்வதேசத்தின் முன்பு அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட களத்தில் சில விடயங்களை நிரூபிக்க வேண்டியதேவை உங்களுக்கு இருந்தது. 2005 நவம்பரில் அவ்வாறான தேவை ஏதேனும் உள்ளதா?

சிங்கள தேசம்தமிழர்களுக்கு நீதியான அரசியல் தீர்வை ஒருபோதும் வழங்காது என்ற 57 ஆண்டு கால வரலாற்றுண்மையை சர்வதேசத்தின் முன் இடம்பெறும் பேச்சுவார்த்தை களத்தில் நிரூபிக்கவேண்டி இருந்தது.

1977 ஆம் ஆண்டு தமிழ்த்தேச மக்கள் கண்காணிப்பாளர்கள் முன் இடம்பெற்ற, அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயகத் தேர்தல் களத்தில் நிரூபிக்க வேண்டியிருந்தது.

எமது ஏக பிரதிநிதிகள் விடுதலைப்புலிகள் தான் என்பதனையும், அவர்களால் முனவைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார வரைபுக்கு ஏகோபித்த ஆதரவையும் வழங்குகிறோம் என்பதை அதேகளத்தில் நிரூபிக்கவேண்டி இருந்தது.

நாம் இந்த மூன்றையும் சர்வதேசம் வியக்கும் வண்ணம் நிரூபித்தோம். இனி எதை நாம் நிரூபிக்க வேண்டும்.

பாதை திறப்பு, பொருளாதார தடை நீக்கம், இராணுவ முகாம்களை அகற்றல், மீள்குடியேற் றம், புனர்வாழ்வு புனர் நிர்மாணம், அரசியற் தீர்வு ஆகிய ஆறு வேலைத்திட்டங்கள் பேச்சுக்கான களத்திலிருந்தன. பாதை திறந்தது, பொருளாதா ரத் தடை நீங்கியது! அதுவும் கூட சிங்களதேசம் எம்பால் இரங்கி அல்ல. தமது பொருளாதார அரசியல் அனுகூலங்களை கருத்திற் கொண்டு மட்டுமே! வேறென்ன நடந்தது?

அரசியற் தீர்வுக்காய் ஆறுகட்டப் பேச்சுக்கள், ஒப்பந்த விதிகளை அமுலாக்க உபகுழுக்கள்- அமுலாக்கப்பட்டதா? சிங்கள அரசு முயலவில்லை! விரும்பவில்லை! பேச்சுக்கள் அர்த்தமற்றுப் போயின! இயல்பு வாழ்க்கை என்ற ஆரம்பக் குறிக்கோளைக் கூட நாம் இன்றும் எட்டவில்லை. எமது விளைநிலப்பரப்புக் களில் எமது கடல்களில் எமது பாடசாலைகளில் எமது தாயகப் பூமியில் இன்னமும் சிறிலங்கா இராணுவம்! இப்போது அச்சமின்றி மரண பயமின்றி நிம்மதியாக உறங்குகிறது. கூடிக்கும் மாளமிடுகிறது.

களின் ஓய்வுக்காகவா- எமது 17 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளம் குருத்துக்களை இழந்தோம். பல்லாயி ரக்கணக்கான மக்களை தாரைவார்த்தோம்.

சர்வதேசத்தின் விருப்பத்திற்கிணங்க தமிழர் தரப்பு முன்வைத்த இடைக்கால தன்னாட்சி வரைபை கண்டவுடன் போருக்கு அஞ்சி ஒளிந்திருந்த சிங்கள தேசத்து பேரினவாதிகள் சீறி எழுந்தனர். பேரினவாத புயல் ஆட்சியை கலைத்தது.

கொழும்பு அரசியல் குழப்பியது. இன்னும் குழப்பம் விடுபடவில்லை. இவற்றையெல்லாம் வேடிக்கை பார்த்துக்கொண்டே வெறும் போர் ஓய்வுடன் மூன்றரை ஆண்டுகளைக் கடத்தி விட் டோம். இந்தப் போர் ஓய்வைப் பயன்படுத்தி சிறிலங்கா அரசு போரினால் உருக்குலைந்து போன தனது இராணுவத்தை மீளக் கட்டியெழுப்பியது. கிழக்கில் தமிழர்களுக்கு எதிரான நிழல்யுத்தத்தை ஆரம்பித்தது. போராளிகளும், தேசப்பற்றாளர்களுமாய் நூறுபேர்வரை பலி எடுத்தது. தற்போது நிழல் யுத்தத்தை வடக்குக்கும் நகர்த்தி இருக்கிறது.

2004 ஏப்ரல்(?) சிறிலங்கா நாடாளுமன்ற தேர்தலில் நாம் வாக்களித்தது அந்த நாடாளுமன்றத்தின் பால் எமக்கு இருந்த நம்பிக்கையினால் அல்ல! அத்தேர்தலைப் பயன்படுத்தி சர்வதேச நடுவர்கள் முன்னிலையில் 1977 மக்கள் ஆணையை மீளப்புதுப்பித்தோம். எமது ஏகபிரதிநிதிகள் யாரென்பதை சர்வதேசம் ஏற்றுக் கொண்ட வழிமுறையில் நிரூபித்தோம். இனிமேலும் நாம் எதை நிரூபிக்கவேண்டும்.

எனவே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரித்து, எமது நிலையை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்துவோம் எனஅந்த அறிக்கையில்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# கல்விக்கான தடைகள் குறித்து ஆராய நவம்பரில் மாணவர் எழுச்சி மாநாடு!

யாழ்ப்பாணம்—

தமிழ் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கான தடைகள் குறித்து ஆராயும் மாணவர் எழுச்சி மாநாடு எதிர்வரும் நவம்பர் 11 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடை பெறவுள்ளது.

இது தொடர்பாக தமிழ் மாணவர், ஒன்றியம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் -

தமிழ் மாணவர்களின் ஒருமித்த சக்தியாக விளங்கும் தமிழ் மாணவர் ஒன்றியத்தால் வடக்கில் முதன்முறையாக மாணவர் ஒன்று கூடி தங்கள் கல்வி மேம்பாட்டுக்கான தடைகளைப்பற்றி ஆராயும் மாணவர் எழுச்சி மாநாடு எதிர்வரும் நவம்பர் 11 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளின் உயர்தர வகுப்பு மாணவர்களில் தமிழ் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள், மாணவ முதல்வர்கள், உயர்தர மாணவர் ஒன்றியத்தினர், கழகங்களின் தலைவர்கள் ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்துகொண்டு பிரச்சினைகளை ஆராயவுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், குறிப்பாக இராணுவ நெருக்கடி, வறுமை மற்றும் மாணவர்களின் ஏனைய இடர்பாடுகள் என்பன ஆராயப்பட்டு இவற்றில் உள்ள குறைபாடுகளை நிவர்த்திசெய்ய மாணவர் பிரதிநிதிகள் மூலம் வேலைத் திட்டங்கள் நகர்த்தப் படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 82 உயர்தரப் பாடசாலைகளைச் சேர்ந்த 1500 மாணவ பிரதிநிதிகள் இந்த் மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த மாநாடு வெற்றிபெற்று வளமான மாணவர் சந்ததியை உருவாக்க கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரின் உதவியை தமிழ் மாணவர் ஒன்றியம் நாடி நிற்கின்றது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# உயர்பாதுகாப்பு வலயத்தில் கைதான இளைஞர்களுக்கு விளக்கமறியல்!

யாழ்ப்பாணம்

காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலய கடற்பகுதியிலும் மாதகலில் படையினரின் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியிலும் பிரவேசித்தார்கள் என கைதுசெய்யப்பட்ட தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள ரவிச்சந்திரன் மற்றும் சுவேந்திரன் ஆகிய இருவரையும் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் மாவட்ட நீதிவான் சரோஜினி இளங்கோவன் உத்தர விட்டார்.

நேற்றுக்காலை மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் இவர்கள் இருவரையும் காங்கேசன்துறை மற்றும் இளவாலை பொலிஸார் ஆஜர்படுத்தியபோதே நீதிவான் இவ்வாறு உத்தரவு பிறப்பித் தார்.

காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப் பகுதி கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட ரவிச்சந்திரனிடம் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் பிஸ்டல் மற்றும் ரவைகளை கொழும்பிலுள்ள இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி பகுப்பாய்வை மேற்கொள்ளுமாறும் நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

## புத்தூரில் படையினர்...

புத்தூர் - மட்டுவில் வீதியில் உள்ள அண்ணமார் ஆலயத்துக்கு அருகிலுள்ள வீடொன்றினுள் நேற்று முன்தினம் அதிகாலை 3 மணியளவில் இராணுவத்தினர் மூவர் சிவிலுடையில் நுழைந்தனர்.

தாயும் மூன்று மகள்களும் மட்டும் தங்கியிருந்த வீட்டினுள் சென்ற சிப்பாய் ஒருவர் 16 வயது பெண்ணை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முற்பட்டபோது அவர் சத்தமிடவே வீட்டிலுள்ளோரும் - அயலவர்களும் ஒன்று கூடினர். இதையடுத்து மூன்று படையினரும் தப்பியோடினர். இவர்களைப் பொதுமக்கள் துரத்திச்சென்ற போது அப்பகுதியில் இருந்த இராணுவ முகாமுக்குள் ஓடிவிட்டனர்.

இந்தச் சம்பவத்தை தொடர்ந்து நேற்றுக்காலை நூற்றுக்கணக்கான பெண்கள் அந்த இராணுவமுகாமுக்கு முன்பாக ஒன்றுகூடி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அத்துடன் - பொல்லுகள், கற்களுடன் திரண்டு நின்ற இளைஞர்களும் வீதிகளை மறித்து ரயர்களைப் போட்டு எரித்ததுடன், பாலியல் வல்லுறவுக்கு முயன்ற படையினரை இனங்கண்டு நீதியின் முன் நிறுத்தவேண்டும் எனக் கோரினர்.

இரு தரப்பினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் அதிகரித்த நிலையில் அப்பகுதிக்கு மேலதிக படையினர் கொண்டுவந்து குவிக்கப்பட்டதுடன், கலகம் அடக்கும் பொலிஸாரும் கொண்டுவரப்பட்டனர்.

இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பொதுமக்கள் தடியடிப் பிரயோகம்செய்து கலைக்க முயன்றனர். இதனால் அப்பகுதியில் கலேபரம் ஏற்பட்டது. இதன்போது பொது மக்களும் கற்கள் வீசி தாக்கியதுடன் படையினரின் முகாம் வேலிகளையும் எரித்தனர்.

படையினரும் கலகம் அடக்கும் பொலிஸாரும் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாக தடிகள், பொல்லுகளால் தாக்குதல் நடத்தியதில் பெண்கள் உட்பட பலர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலால் ஆத்திரம் கொண்ட பொதுமக்கள் படையினரின் முகாமுக்கு முன்பாக ரயர்களைப் போட்டு எரித்து மறியல் போராட்டத்தை நடத்தினர்.

பொதுமக்களை அகன்று செல்லுமாறு பொலிஸார் கேட்டுக்கொண்ட போதும் அவர்கள் மறுத்துவிட்டனர்.

இந்த நிலையில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இராணுவ முகாம் பகுதியில் குண்டுவெடிப்புச் சத்தம் கேட்டதைத் தொடர்ந்து பொது மக்கள் மீது படையினர் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர்.

இதில் நான்கு பொதுமக்கள் படுகாயமடைந்தனர். இவர்களில் ஒருவர் பின்னர் மரணமானார். காயமடைந்த பொதுமக்கள் ஒரு மணி கழித்தே அச்சுவேலி வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டி மூலம் மீட்கப்பட்டு சிகிச்சைக்குட்படுத்தப்பட்டனர்.

மேலும் மூவர் அப்பகுதியில் காயமுற்றதாகக் கூறப்பட்டபோதும் அத்தகவலை உறுதிசெய்ய முடியவில்லை.

படையினர் சுமார் 250 இற்கும் மேற்பட்ட துப்பாக்கிச்சூடுகளை நடத்தியதாகவும் இதனால் பொது மக்கள் சிதறியோடியதாகவும் தெரியவருகிறது.

படையினரின் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் நால்வர் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் தர்மராசா நிரோசன் (வயது 20) என்ற புத்தூரைச் சேர்ந்த இளைஞர் நேற்றிரவு 8.20 மணியளவில் மரணமானார்.

இவரைத் தவிர கிறிஸ்ரி கிளீமன்ரோ (வயது 33), ஐயங்கன் பொன்னி (வயது 70 - பெண்), எஸ்.நாகலிங்கம் (வயது 33) ஆகிய மூவரும் படையினரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி காயமுற்ற நிலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இவர்களைவிட நேற்றுக்காலை இடம்பெற்ற படையினரின் தடியடிப் பிரயோகத்தில் கே.நல்லையா (வயது 60), எஸ்.பார்த்தீபன் (வயது 30), ரீ.நீகன் (வயது 25), கே.கோவிந்தன் (வயது 40), எஸ்.தனீஸ் (வயது 25), பி.ஆனந்தன் (வயது 40) ஆகியோரும் காயமடைந்ததாகத் தெரியவருகிறது.

மேலும் பலர் அடிகாயங்களுக்கு உள்ளானதாகத் தெரிவிக்கப்படுகின்ற போதும் உடனடியாக விபரங்களைப் பெறமுடியவில்லை.

இதேவேளை, நேற்று மாலை 3.30 மணியளவில் படையினரின் முகாம்மீது மூன்று கைக்குண்டுகள் வீசப்பட்டதாகவும் இதில் படைச் சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் விதாரண தெரிவித்தார்.

பின்னர் மாலை 4.30 மணியளவிலும் படையினர்மீது 3 கிரனேட்டுக்கள் வீசப்பட்டதாகவும் எனினும், தமக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்றும் படைத்தரப்பு தகவல்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவங்களைத் தொடர்ந்து புத்தூர்ப் பகுதியில் நேற்று முழுநாளும் பெரும் பதற்றம் நிலவியது. நேற்று மாலை அந்தப்பகுதி மக்கள் பலர் தமது வீடுகளைவிட்டு வெளியேறி அருகில் உள்ள உறவினரின் வீடுகளில் தங்கியிருந்தனர். சில இடங்களில் படையினர் வீடு வீடாகத் தேடுதல் நடத்தியதாகவும் தெரியவருகிறது.

நேற்று மாலை 6 மணிக்கு பின்னர் அப்பகுதியில் மயான அமைதி நிலவியது. படையினர் பலர் கவச வாகனங்கள் சகிதம் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை முதல் புத்தூர் சந்திப்பகுதியில் மோதல் சம்பவங்கள் இடம்பெற்றபோதும்- போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் மாலை 5 மணிக்குப் பின்னரே அந்தப் பகுதிக்கு வந்ததாகக் கூறப்படுகிறது.

நேற்றைய சம்பவங்கள் இடம் பெற்ற பகுதியிலேயே கடந்த செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி பலமாகத் தாக்கப்பட்டு முகாம் முன்பாக வீசப்பட்டிருந்த நிலையில் 57 வயதான கிருபாரட்ணம் என்ற வயோதிபர் மீட்கப்பட்டு பின்னர் மரணமானார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பூமிக்கு....

அவதானிக்கமுடியும்.

செவ்வாய்க்கோள் மிகவும் பிரகாசம் உள்ளதால் ஏனைய கோள்களைவிட தெளிவாகக் காட்சியளிக்கும் என ஆதர்சி கிளார்க் ஆய்வு மையம் மேலும் தெரிவித்துள்ளது.

## படையினரின்....

இங்குள்ள மக்கள் அணி அணியாக தலைவரின் பாசறை சென்று தற்காப்புப் பயிற்சியை முடித்துவந்துள்ளனர். இதனை இங்குள்ள படைத்தரப்புக்கு வெளிப்படையாகவே சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

ஒரு புறத்தில் எமது மக்களை பல வழிகளில் கேவலப்படுத்தப்படுத்த முயலும் இராணுவத் தலைமை -, மறுபுறத்தில் இடையிடையே பிச்சைக்காசு போட்டும், தின்பண்டங்களை வழங்கியும் பூச்சாண்டி காட்ட எண்ணுகிறது. இராணுவத்தின் இந்தச் செயற்பாடுகள் குறித்து அந்த இடங்களுக்குச் சென்று பார்வையிட்டுவரும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரும் கருத்துக்களை வெளிப்படுத்தவில்லை.

இதனால் இராணுவத்தினரின் அடாவடித்தனங்களை பார்த்துக் கொண்டிருப்பதற்கு மட்டும்தான் கண்காணிப்புக்குழுவினரா என எண்ணத் தோன்றுகிறது.

அரசியல் பணி செய்த போராளிகளின் பாதுகாப்பை கண்காணிப்புக் குழு உறுதிப்படுத்தத் தவறியதால் அவர்கள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குச் சென்றுள்ளனர்.

இன்று குடாநாட்டு மக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளதை புரிந்துகொண்டு கண்காணிப்பாளர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்வதோடு இராணுவத்தினரின் அராஜகத்தையும் வன்மையாகக் கண்டிக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொதுமக்கள்....

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை - போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் நேற்று மாலை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு விமானப் படையின் ஹெலிகொப்ரர் மூலம் கிளிநொச்சி வந்தடைந்த இந்தக் குழுவினரை விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் வரவேற்றார்.

பின்னர் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் இந்தக் குழுவினர் பேச்சுக்களை நடத்தினர். இந்தச் சந்திப்பு நேற்று பிற்பகல் 4.30 மணி தொடக்கம் 6.30 மணிவரை நடைபெற்றது.

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் உள்ளிட்ட குழுவினர் இந்தப் பேச்சுக்களில் பங்கேற்றனர்.

தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனும் பேச்சுக்களின் போது உடனிருந்தார்.

இந்தச் சந்திப்பில் மேலும் -

போர்நிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடுவதற்கு விடுதலைப் புலிகள் ஆர்வமாக உள்ளனர். ஆனால் அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தலில் கவனம் செலுத்தியுள்ளது. எனவே இது தொடர்பான முடிவு கொழும்பிலிருந்தே வரவேண்டும்.

சமாதான முயற்சிகளுக்கு எதிரானவர்களாக இராணுவம் உள்ளது. இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளிலிருந்து எமது உறுப்பினர்கள் விலகிக் கொண்டமை, அவர்களுக்கு அங்கு எந்தவிதமான பாதுகாப்பு உத்தரவாதமும் இல்லையென்ற பின்னரே யாகும்.

எனவே இந்த விடயத்தில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தலையிட்டு அங்கு உறுப்பினர் செல்வதற்கான வழியை ஏற்படுத்தவேண்டும் என தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

போர்நிறுத்த உடன்பாடு, கிளிநொச்சிப் பகுதியில் அண்மையில் வீழ்ந்து நொருங்கிய ஆளில்லா விமானம், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் விவாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கருத்துக்கள் எதனையும் தெரிவிக்க வில்லை.

சந்திப்பில் கலந்துகொண்ட கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் கிளிநொச்சியில் நேற்றிரவு தங்கியிருந்துவிட்டு இன்று கொழும்பு பயணமாவார்.

# கத்திகள் பொல்லுகளுடன் சென்ற 15 பேர் அச்சுவேலியில் கைது!

அச்சுவேலிப் பகுதியில் நேற்று முன்தினமிரவு இலக்கத்தகடற்ற மினிபஸ் ஒன்றில் சென்ற 15 பேரடங்கிய குழுவினரை அச்சுவேலிப் பொலிஸார் கைதுசெய்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் குறித்த பஸ்ஸில் சென்ற இந்தக் குழுவினர் - கத்திகள் பொல்லுகள் மற்றும் சில பொருட்களையும் கொண்டுசென்றனர்.

பஸ்ஸை வழிமறித்த அச்சுவேலி பொலிஸார் அதனை சோதனையிட்டவேளை மேற்படி ஆயுதங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதுடன் அவர்களையும் கைதுசெய்தனர்.

இவர்களை நேற்று மல்லாகம் நீதிமன்றில் பொலிஸார் ஆஜர்படுத்தியவேளை அனைவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# ஆசிரியரால் தாக்கப்பட்ட இரண்டு மாணவர்கள் வைத்தியசாலையில்!

யாழ்ப்பாணம் —

யாழ்.நகரிலுள்ள பாடசாலையொன்றின் ஆசிரியரால் தாக்கப்பட்டு காயமடைந்த இரண்டு மாணவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக பொலிஸாரால் நேற்றிரவு அனுமதிக்கப்பட்ட னர்.

வைத்திலிங்கம் சாந்தரூபன் (வயது 12), நாகேந்திரராசா அனுஷாந் (வயது 12) ஆகிய இரண்டு மாணவர்களே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேற்படி மாணவர்களின் பெற்றோர் - மாவட்ட சிறுவர் பாதுகாப்பு பிரிவிடம் முறையிட்டுள்ளனர்.

இதேவேளை, மாணவர்களைத் தாக்கிய ஆசிரியரைத் தாம் கைது செய்யவில்லையென யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர்.

## ரணில் உயிருக்கு ஆபத்தாம்!

# பிரசாரக் கூட்டங்களை குறைக்க பொலிஸ் மா அதிபர் ஆலோசனை!

கொழும்பு —

ஐ.தே.கட்சி ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதால் - எதிர்வரும் நாட்களில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ள தேர்தல் பிரசாரக் கூட்டங்களை இயன்றவரை குறைக்குமாறு எதிர்கட்சித் தலைவரின் பாதுகாப்புப் பிரிவுக்கு பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இரகசிய புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலை அடுத்தே ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்புக் குறித்து பொலிஸ் மா அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை - புலனாய்வுப் பிரிவினரின் இந்தத் தகவல் குறித்து ஐ.தே.கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் கூடி ஆராய்ந்ததாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (தே)

# மகிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனம்; இடதுசாரிக் கட்சிகள் அதிருப்தி!

மகிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள 'மகிந்தவின் சிந்தனைகள்' என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில அம்சங்கள், தமது கொள்கைகளுக்கு மாறான வகையில் அமைந்துள்ளதாக ஐந்து இடதுசாரிக் கட்சிகள் தெரிவித்துள்ளன.

லங்கா சமசமாஜக்கட்சி, சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சி, சிறிலங்கா மக்கள் கட்சி, தேச விடுதலை மக்கள் கட்சி மற்றும் ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகிய கட்சிகளே மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கியுள்ளன.

ஆயினும், பொது அடிப்படையில் நோக்கும்போது மகிந்த ராஜபக்ஷவின் வேலைத்திட்டங்கள், மக்கள் மயமான ஒன்றென இந்த ஐந்து கட்சிகளின் சார்பில் சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய பிரச்சினை தொடர்பாக தாம் பின்பற்றும் நிலைப்பாடுகளுக்கு அமைய இறுதியிலேனும் மகிந்த ராஜபக்ஷ செயற்படுவாரென எதிர்பார்ப்பதாக இந்த இடதுசாரிக் கட்சிகள் மேலும் கூறியுள்ளன.

தங்களின் நிலைப்பாட்டுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கப்போவதாக இந்த ஐந்து இடதுசாரிக் கட்சிகளும் தெரிவித்துள்ளன.

# செட்டிக்குளத்தில் குடும்பஸ்தர் பலி!

வவுனியா—

செட்டிகுளம் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்றுக்காலை இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயம் அடைந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லும் போது உயிரிழந்தார்.

அவரது மனைவி படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மன்னாரிலிருந்து செட்டிகுளம் நோக்கி மணல் ஏற்றிச்சென்ற லொறி மோட்டார் சைக்கிளில் சென்ற தம்பதியர் மீது மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது. விபத்தில் உயிரிழந்தவர் 36 வயதான வீரசிங்கம் அமிர்தலிங்கம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 29.10.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# எமது கலை, கலாசாரத்தை பாதுகாக்கும் பொறுப்பு மாணவ சமூகத்திடமே உள்ளது

## பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை



யாழ்ப்பாணம் —

ஒரு நாட்டின் இனம் அழியாமல் இருப்பதற்கு அவர்கள் தங்கள் கலை, கலாசாரம் என்பவற்றைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கலைமாணவர் மன்றத்தின் தேனமுதம் இதழை வெளியிட்டு வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எமது கலை, கலாசாரங்களை பாதுகாத்தும் முக்கிய பொறுப்பு இளம் சமுதாயத்திலேயே தங்கியுள்ளது. அதாவது மாணவ சமுதாயத்தினருக்கே இதில் பெரும் பங்குண்டு. எமது இன்றைய மாணவர்கள் தமது உயர் கல்வியைத் தொடரும் போது, விஞ்ஞான பாடங்களையே கற்க அதிகம் விரும்புகின்றனர். அது அவர்களுடைய தவறு அல்ல. ஆனால், வெளிநாடுகளிலே அதாவது ஐரோப்பிய நாடுகளிலே மாணவர் விரும்பும் பாடநெறியாக ஊடகத்துறை தான் முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்ததாக ஆங்கில இலக்கியம் காணப்படுகிறது.

இன்றைக்கு உலகத்தின் முக்கியநாடுகளில் ஒன்றான பிரித்தானியாவில் 27 மருத்துவ பல்கலைக்கழகங்கள் இருந்தும் இன்று மருத்துவர் பற்றாக்குறையால், மற்றைய நாடுகளில் இருந்து பிரித்தானியாவுக்கு அவர்கள் செல்கின்றனர். இது எதை எடுத்துக் காட்டுகின்றது என்றால் அங்கு உள்ள மாணவர்களின் கலைத்துறை சார்ந்த பாடநெறிகள் மீதான ஆர்வமும் தேடலும்தான்.

எமது நாட்டில் எழுத்துத்திறன் குறைந்து கொண்டு செல்கின்றது. பாடசாலையிலும் சரி, பல்கலைக்கழகங்களிலும் சரி எழுத்துத்திறன் குறைவாகத் தான் காணப்படுகின்றது. ஒருவன் தனது சிறுவயதிலே ஒரு கட்டுரையை நன்றாக எழுதுவானாக இருந்தால் அவன் எதிர்காலத்தில் எழுத்தாளனாக வருவதற்கு அது வழிகாட்டியாக அமைகின்றது. ஒருவனுக்கு பணம் தான் முக்கியமல்ல. அவன் நல்ல கருமங்களை செய்யும் போது, அவனுக்கு பணம் தானாகவே வந்து சேரும்.

எமது கலை, கலாச்சாரங்களை பாதுகாத்துக் கொள்வதற்கான அடையாளங்களாக நாம் படைக்கின்ற இலக்கியங்கள் தான் பிற்கால சமுதாயத்துக்கு எடுத்துகாட்டாக அமையப் போகின்றது என அவர் குறிப்பிட்டார்.

## கலந்துரையாடல்

தெல்லிப்பளை —

வலி. வடக்கு பொது அமைப்புகள் ஒன்றியத்தின் கலந்துரையாடல் - நாளை பிற்பகல் 3 மணிக்கு தெல்லிப்பளை கிராம வங்கி முன்னர் இயங்கிய இல்லத்தில் - தலைவர் சி.சிவமகாராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் வலி.வடக்கு பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இன்னமும் மீளக் குடியமர முடியாத மக்களுக்கு சமுர்த்தி முத்திரை வழங்குவதால் ஏற்படும் பாதிப்பு பற்றியும், அந்தக் பாதிப்புக்களை எவ்வாறு நிவர்த்தி செய்வது என்பது பற்றியும் கலந்துரையாடப்படவுள்ளது.

எனவே, இதில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# சுழற்சி முறையிலான மின்வெட்டு குடாநாட்டில் விரைவில் நீக்கப்படும்

## பொது முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

மின்பிறப்பாக்கியில் ஏற்பட்டுள்ள கோளாறு காரணமாக, தற்போது குடா நாட்டில் சுழற்சி முறையில் ஏற்படும் மின்வெட்டு நீக்கப்பட்டு, விரைவில் வழமைபோல மின்விநியோகம் இடம்பெறும் என இலங்கை மின்சார சபையின் யாழ். மாவட்ட பொதுமுகாமையாளர் சண்முகநாதன் தெரிவித்தார்.

அண்மை நாட்களாக குடாநாட்டில் சுழற்சி முறையில் மின்வெட்டு இடம்பெறுவது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது -

குடாநாட்டுக்கு மின்சாரம் வழங்கும் மின்பிறப்பாக்கிகளில் ஒன்று திடீரென பழுதடைந்தமையாலேயே குடாநாட்டின் சில பிரதேசங்களில் குறிப்பிட்ட சொற்ப நேரத்துக்கு மின்வெட்டை சுழற்சிமுறையில் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

பழுதடைந்த மின்பிறப்பாக்கி திருத்தும்பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த மின்பிறப்பாக்கியைத் திருத்தும் பணி முடிவுற்றதும், விரைவில் சுழற்சி முறையிலான மின்வெட்டு நீக்கப்பட்டு வழமைபோன்று மின்விநியோகம் இடம்பெறும்.

அத்துடன், குடாநாட்டில் மின்சாரம் வழங்கப்படாத பல பகுதிகளுக்கும் எதிர்வரும் டிசம்பருக்குள் மின்சாரம் வழங்கப்படவுள்ளது. இதற்காக மின்சார சபைப் பொறியியலாளர்கள் மற்றும் ஊழியர்கள் தீவிர முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அடையாள அட்டை கண்டெடுப்பு

வல்வெட்டித்துறை —

வேவில் - வல்வெட்டி என்ற முகவரியையுடைய மகாதேவன் - சியாமாவினதும், புற்றளை புலோலி தெற்கு என்ற முகவரியை உடைய கந்தையா வேல்முருகு என்பவரதும் தேசிய அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு நமது ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

# உலக வங்கியின் வீடமைப்புக் கொடுப்பனவு தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருகின்றது

## பிரதிப் பணிப்பாளர் சாம்பசிவம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

உலக வங்கியின் வடக்கு - கிழக்கு மாகாண மீள் வீடமைப்பு திட்டத்தின் கீழ், யாழ். மாவட்டத்தில் இந்த ஆண்டு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கட்டம் கட்டமாக கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருவதாக இதன் பிரதிப் பணிப்பாளர் வே.சாம்பசிவம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

உலக வங்கியின் வீடமைப்பு திட்டத்தின் கீழ் இந்தவருடம் யாழ்.மாவட்டத்தில் 1635 வீடுகள் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது. அதில் யாழ்.மாவட்டத்தில் அனைத்து பிரதேச செயலர் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக தெரிவு செய்யப்பட்ட 1635 பேருக்கும் 1 ஆம் கட்ட கொடுப்பனவு வழங்கப்பட்டது. 2 ஆம் கட்ட கொடுப்பனவு 1368 பேருக்கும், 3 ஆம் கட்டக் கொடுப்பனவு 576 பேருக்கும், 4 ஆம் கட்ட கொடுப்பனவு 104 பேருக்கும் இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் இந்த வருடத்துக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தக் கொடுப்பனவுகளுக்காக இதுவரை 215 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, உலகவங்கியின் வீடமைப்பு திட்டத்தின் கீழ் அடுத்த ஆண்டு யாழ்.மாவட்டத்தில் 4000 பேருக்கு வீடமைப்பு கொடுப்பனவு வழங்குவதற்கு அண்மையில் திருகோணமலையில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை எட்டு



பெயர் : சி.சிவடிலூஜினி
முகவரி : வேலணை.

அகவை நான்கு



பெயர் : த.தனுஜன்
முகவரி : பலாலி கிழக்கு

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:



கூப்பன்கள் பத்தும் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்


# நெடுந்தீவு - நயினாதீவு கடற்பரப்பில் இந்திய இழுவைப் படகுகள் அத்துமீறல்

## நெடுந்தீவு மீனவர்கள் விசனம்

நெடுந்தீவு —

நெடுந்தீவுக்கும் - நயினாதீவுக்கும் இடைப்பட்ட கடற்பிரதேசத்தில் கடந்த சில நாட்களாக இந்திய இழுவைப்படகுகளில் அத்துமீறிய மீன்பிடித்தலில் ஈடுபடுவதால், தீவுப்பகுதி மீனவர்கள் தமது நாளாந்த தொழிலை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.



கடந்த திங்கட்கிழமை முதல் நூற்றுக்கும் மேற்பட்ட இழுவைப் படகுகள் இந்திய நாட்டுக் கொடியுடன் நெடுந்தீவு - நயினாதீவு கரையோரங்களில் அத்துமீறிய தொழிலை மேற்கொண்ட வேளையில் வழமையான கரையோரப் பாதுகாப்புக்கென கடற்படைக் கலங்கள் தரித்து நின்ற போது, அதற்கெதிராக எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளாது நின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, கடல் வளத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் தற்போது இழுவை மீன்பிடித்தல் தடைசெய்யப்பட்டுள்ள வேளையில் அந்த வளத்தை சிதறடிக்கும் வகையில் இந்திய இழுவைப் படகுகள் தொழிலில் ஈடுபடுவது விசனத்திற்குள்ளாக்கியுள்ளது.

வாரத்தில் திங்கள், புதன், சனி ஆகிய மூன்று தினங்களும் பெருமளவு இந்திய இழுவைப் படகுகள் அத்துமீறி தொழிலில் ஈடுபடுவதால், அத்தினங்களில் தீவக மீனவர்கள் தமது தொழிலை செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், அத்தினங்களில் தொழிலில் ஈடுபடும் மீனவர்களது வலைகள் சேதப்படுத்தப்படுகின்றமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும். (113)

## சிவலிங்கப் புளியடியிலுள்ள வீதிவிளக்கு ஒளிரவில்லை

யாழ்ப்பாணம் —

பல மாதங்களாக யாழ்ப்பாணம் சிவலிங்கப்புளியடி சந்தியில் உள்ள மின்சார சபையினால் பொருத்தப்பட்ட வீதி விளக்கு துயிலும் நிலையில் உள்ளதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த வீதி விளக்கு பொருத்தப்பட்டு ஒரு சில மாதங்களே நல்ல நிலையில் ஒளிர்ந்தது. தற்போது இந்த விளக்கு ஒளிராமல் காணப்படுகிறது. இதனால் விபத்துக்கள், திருட்டு போன்றவை அதிகரித்து காணப்படுகிறது.

இந்த வீதிவிளக்கை மாற்றும்படி பல முறை மின்சாரசபைக்கு அறிவத்தும் பலன் எதுவும் கிடைக்கவில்லையென அந்தப் பகுதி மக்கள்விசனம் தெரிவித்தனர்.

## வீதி திருத்தம்

யாழ்ப்பாணம் —

பல வருடங்களாக திருத்தப்படாமல் இருந்து வந்த யாழ். பாங்ஷால் வீதி திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்டமாக கடந்த புதன்கிழமை கற்குவியல்கள் வீதி ஓரங்களில் பறிக்கப்பட்டுள்ளன.

கடந்த பதினைந்து வருடங்களாக இந்த வீதி செப்பனிடப்படாமல் இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (206)

# கடந்த காலமும் கழிவிரக்கமும் ஓவியக் கண்காட்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம் —

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை கலை வட்டத்தினரின் ஏற்பாட்டில் 'கடந்த காலமும் கழிவிரக்கமும்' என்ற தலைப்பில் மூத்த ஓவியர் மு.கனகசபையின் ஓவியங்களின் தொகுப்பு கண்காட்சி யாழ்.பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் நாடாவை வெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். மங்கள விளக்கை ஓவியர் மு.கனகசபை, கலாநிதி சிதம்பரநாதன், பேராசிரியர் சண்முகலிங்கன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

இந்தக் கண்காட்சி இன்றும், நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

# ஆதிகோவிலடிப் பகுதியில் இராணுவத்தின் பாவனையிலிருந்த வீடுகள் பொதுமக்களிடம் கையளிப்பு

வடமராட்சி —

வடமராட்சி - வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியில் இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த சுமார் 15 வீடுகள் நேற்று முன்தினம் வீட்டு உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன. வடமராட்சியில் நிலைகொண்டுள்ள 524 ஆவது படையணித் தளபதி, ஆதிகோவிலடி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதி எஸ்.இந்திரராஜாவிடம் அந்தப்பகுதி மக்கள் முன்னிலையில் இந்த வீடுகளை உரியவர்களிடம் கையளித்தார்.

1996 ஆம் ஆண்டு படையினர் வடமராட்சியைக் கைப்பற்றிய போது, இந்த வீடுகளை தமது பாவனைக்காக ஆக்கிரமித்துக் கொண்டனர்.

கடந்த புதன் கிழமை இந்த வீடுகளிலிருந்து படையினர் வெளியேறினார்கள். படையினர் இந்த வீடுகளை ஆக்கிரமித்த போது- கதவுகள், யன்னல்கள் யாவும் இருந்தன. தற்போது அவை ஒன்றுமில்லையே? என மக்கள் கேள்வி எழுப்பியபோது பதிலளித்த பிரிகேடியர்- படையினர் தங்கியிருந்த காலங்களில் பல அதிகாரிகள் கடமையாற்றி வந்துள்ளனர். எனவே, இதற்கு என்னால் எதுவுமே செய்ய முடியாது. இருப்பினும் விபரங்களைத் தந்தால் படையினர் தங்கியிருந்த காலங்களுக்கான வாடகைப் பணம் பெற்றுத்தர முடியும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியில் கையளிக்கப்பட்ட பல வீடுகளின் யன்னல், கதவுகள் யாவும் கழற்றப்பட்ட நிலையில் காட்சியளித்தன. கடந்த 10 வருடங்களாக இந்த வீடுகளில் படையினர் நிலைகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (14)

# பூநகரி-கண்ணகைபுரம் பிரதேசத்தில் "தமிழ் ஒளிர்" முன்பள்ளி கட்டடத் திறப்புவிழா

பூநகரி

தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தால் பூநகரி முட்கொம்பன் எனும் இடத்தில் அமைந்துள்ள கண்ணகைபுரத்தில் "தமிழ் ஒளிர்" முன்பள்ளிக்கான புதிய கட்டடத் திறப்புவிழா கடந்த புதன்கிழமை காலை 11.00மணியளவில் நடைபெற்றது.





முட்கொம்பன் கிராம சமூக பொருளாதார அபிவிருத்திக்குழுத் தலைவர் மு.கதிரவேலு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - மங்கள விளக்கை ஊரக மேம்பாட்டுப் பேரவைச் செயலாளர் சு.ஜெயகாந்தன், சுகாதார உத்தியோகத்தர் சந்திரகாந்தி, காவல்துறை உறுப்பினர் சி.ஜெயானந்தன், சந்தோஷம் உளவளத்துணை நிலைய இணைப்பாளர் த.சுதாகரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தேசியக்கொடியை அக்கராயன் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் மாறன் ஏற்றிவைத்தார். தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியை அக்கராயன் பிரதேச உதவிப்பணிப்பாளர் நல்லையா ஏற்றிவைத்தார். புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனக் கொடியை அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத் தலைவர் சு.கிருஸ்ணபிள்ளை ஏற்றிவைத்தார். முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையக் கொடியை அக்கராயன் பிரதேச முன்பள்ளி மேற்பார்வையாளர் சாந்தகுமாரி ஏற்றிவைத்தார். முன்பள்ளிக் கொடியை முன்பள்ளி ஆசிரியர் பெ.கோமதி ஏற்றிவைத்தார்.

முன்பள்ளியின் பெயர்ப் பலகையை போரூட் வன்னித்திட்ட உதவியாளர் அனான் திரைநீக்கம் செய்து வைத்தார். முன்பள்ளிக் கட்டடத்தை போரூட் வன்னிக்கான திட்ட முகாமையாளர் ஆன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். இந்த நிகழ்வின் வரவேற்புரையை முன்பள்ளி மாணவர்கள் நிகழ்த்தினர். தலைமையுரையை முட்கொம்பன் கிராம சமூக பொருளாதார அபிவிருத்திக் குழுத்தலைவர் மு.கதிரவேலு நிகழ்த்தினார். சிறப்புரையை நல்லையா, அக்கராயன் அரசியற்துறைப்பொறுப்பாளர் மாறன், போரூட் வன்னித் திட்ட முகாமையாளர் ஆன் ஆகியோர் நிகழ்த்தினர். இந்த நிகழ்வின் நன்றியுரையை தமிழ் ஒளிர் முன்பள்ளிப் பெற்றார் ஆசிரியர் சங்கத் தலைவர் ம.ஞானவேல் நிகழ்த்தினார்.

# தமிழீழ சுகாதார சேவையினரின் உணவகங்களுக்கான வேண்டுகோள்

கிளிநொச்சி

தொற்றுநோய்கள் பரவவிடாது தடுக்க - உணவகங்கள் பின்பற்ற வேண்டிய விதிகள் பற்றி தமிழீழ சுகாதார சேவை நிறுவனத்தினரால் உணவு கையாளும் விற்பனை உரிமையாளர்களுக்கான வேண்டுகோள்களை விடுத்துள்ளனர்.

தற்பொழுது மழைகாலம். தொற்றுநோய் ஏற்படும் அபாயம் உள்ளதால்- உணவுச்சாலை, தேனீர்ச்சாலை, குளிர்பானச்சாலை, குளிர்கழி உற்பத்தி விற்பனை நிலையம் ஆகியவற்றின் உரிமையாளர்கள், பணியாளர்கள் அனைவரும் பின்வரும் நடைமுறைகளை உடனடியாகக் பின்பற்றுமாறு தமிழீழ சுகாதார சேவையினர் வலியுறுத்தியுள்ளனர்.

மலம் கழிப்பதற்கு மலசல கூடங்களை மட்டும் பாவிக்க வேண்டும். மலம் கழித்த பின், உணவு சமைக்கமுன், உணவு உண்ண முன் சவர்க்காரமிட்டுக் கைகளை நன்கு கழுவவும்.

பச்சையாக உண்ணும் உணவு வகைகளை(வல்லாரை, கரட் சம்பல்) தயாரித்தல், விற்பனை செய்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.

கொதித்தாறிய நீர், நிலையத்தில் போதியளவு இருத்தல் வேண்டும். நுகர்வோருக்கு கொதித்தாறிய நீர் வழங்கப்படுதல் வேண்டும். பணியாளர், உரிமையாளர் அனைவரும் தனிநபர் சுகாதாரத்தை கடைப்பிடிக்க வேண்டும். சமைத்த உணவுகளை ஈ மொய்க்காதவாறு பாதுகாப்பான அலுமாரியில் மூடி வைத்தல் வேண்டும்.

சுற்றாடலில் நீர் தேங்காதவாறு இருத்தல் வேண்டும். இயன்றளவு உடன் சமைத்த உணவுகளை வழங்க வேண்டும். திண்ம, திரவக் கழிவுகளை உரிய முறையில் பாதுகாப்பாக இறுதியகற்றல் மேற்கொள்ளல் வேண்டும். தொற்று நோய் ஏற்பட் டால் உடனடியாக வைத்தியசாலை சென்று பூரண சிகிச்சை மேற்கொள்ளல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இசை அரங்கேற்றம்

கிளிநொச்சி

தமிழீழ நுண்கலைப்பிரிவு நடத்தும் சங்கீத கலாவித்தகர் சிவநாதன் சிவசத்தியமோகனின் இசைஅரங்கேற்ற நிகழ்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.



இந்த நிகழ்வில் - சி.சிவசத்தியமோகன் (வாய்ப்பாட்டு), சு.கோபிதாஸ் (வயலின்), க.கண்ணதாஸ் (மிருதங்கம்), இரா.சிவராமன் (கெஞ்சிரா), என்.மாதவன் (கடம்), எஸ். செந்தூரன் (முகர்சிங்), மணிமொழி கிருபாகரன் (தம்புரா) ஆகியோர் பக்கவாத்தியக் கலைஞர்களாகப் பங்கேற்கவுள்ளனர்.

# காலச் சுவட்டில்...

## இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### ஒக்ரோபர் 29

1863 : சுவிஸ்சர்லாந்தைச் சேர்ந்த ஹென்றி டுனன்ட் என்பவரால் செஞ்சிலுவைச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

1911: புகழ்பெற்ற அமெரிக்கப் பத்திரிகையாளரும், உரிமையாளரும் புலிட்சர் பரிசை நிறுவியவருமான ஜோசப் புலிட்சர் மரணமடைந்தார்.

1914 : துருக்கி - ஜேர்மனிக்கு ஆதரவாக போரில் இறங்கி, கருங்கடல் பகுதியிலுள்ள ரஷ்ய நகரங்களைத் தாக்க ஆரம்பித்தன.

1917 : ரஷ்யாவில் எட்டுமணி நேர வேலை சட்டம் நடை முறைக்கு கொண்டுவரப்பட்டது.

1918: நேச நாடுகளது கடற்படைச் சபை, போர் நிறுத்தம் பற்றிய விதிமுறைகளைத் தயாரிக்கத் தொடங்கியது.

* ஜேர்மனியின் கடற்படைப்பிரிவு வடகடலில் "வெற்றி அல்லது வீரமரணம்" என்ற படி போரில் குதித்தது.

* யூகோஸ்லோவியா சுதந்திரம் அடைந்ததாக பிரகடனம் செய்தது.

1919: அகில உலகத் தொழிலாளர்களது முதலாவது மகாநாடு வொஷிங்டனில் ஆரம்பமாகியது.

1923: துருக்கி குடியரசு நாடானது. ஜனாதிபதியாக முஸ்தபா கேமல் பதவியேற்றார்.

1932: பிரான்ஸின் சொகுசுக் கப்பலான "நோர்மண்டி" மிதக்க விடப்பட்டது.

1933: கருத்துப்படம் மூலம் மக்கள் மனதில் நிலையான இடத்தைப் பிடித்த அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல ஓவியர் ஜோர்ஜ் பெஞ்சமின் சாக்ஸ் மரணமடைந்தார்.

1941: "போரில் வெற்றி மட்டுமே நமது குறிக்கோள் அல்ல. இந்தப்போரில் வெற்றி பெறுவதில் எவ்வளவு உறுதியாக இருக்கின்றோமோ அவ்வளவு உறுதியாக சமாதானத்தை நிலைநாட்டுவதிலும் உள்ளோம். ஒரு நாடு மட்டுமே தனியாகச் சமாதானத்தை நிலைநாட்ட முடியாது. இந்தப் போர் இரு நாடுகளுக்கு இடையிலான போர் அல்ல. எதிர்கால நாகரிகத்தை நிலைநிறுத்துவதற்கான போர்" என்று இரண்டாவது உலகயுத்தம் தொடர்பாக பிரித்தானிய பிரதமர் அட்லி அகில உலகத்தொழிலாளர் சம்மேளனத்தில் உரையாற்றினார்.

1947: பெல்ஜியம், நெதர்லாந்து, லக்ஸ்ஷம்பேர்க் ஆகிய மூன்று நாடுகளும் இணைந்து பெநிலக்ஸ் என்ற பெயரில் பொதுச் சங்க ஒன்றியம் ஒன்றை அமைத்துக் கொள்ளத் தீர்மானித்தன.

1956: இஸ்ரேல் -எகிப்து மீது படையெடுத்தது. சீனாய் பகுதியைக் கைப்பற்றிக்கொண்டது.

1964: தங்கனீகாவும், ஸான்ஸிபாரும் ஒன்றாக இணைந்து "தான்ஸானியா" என்னும் பெயருடன் புதிய நாடாக மலர்ந்தது.

1987: உலக மக்கள் தொகை 500 கோடியை எட்டியதாக அறிவிக்கப்பட்டது.

1991: ஹொங்காங்கின் அகதி முகாம்களில் உள்ள வியட்நாம் அகதிகளை வலுக்கட்டாயமாக வியட்நாமுக்குக் கொண்டு வர வியட்நாம் இரகசிய தீர்மானத்தை எடுத்தது.

1995: தென்பசிபிக்கில் முருரோவா என்னுமிடத்தில் பிரான்ஸ் அணு ஆயுத சோதனை நடத்தியது. கடந்த இரண்டு மாதங்களுக்குள் பிரான்ஸ் நடத்திய மூன்றாவது அணு ஆயுத சோதனை இதுவாகும்.

தொகுப்பு : - சந்துரு

# கருணா நிலையத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒழிப்பு நிகழ்வு

கிளிநொச்சி

கிளிநொச்சியிலுள்ள கருணா நிலையத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்புப் பிரகடன நிகழ்வு, நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்றது.

"ஒக்ஸ்பாம்", மாவட்டச் செயற்பாட்டுக்குழு ஆகியவற்றின் அனுசரணையுடன் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - பெண்கள், ஆண்களென சுமார் 1,500 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



இந்த நிகழ்வில், பெண்களை மேம்படுத்தும் இசை நிகழ்வுகளும், உரைகளும் நடைபெற்றன. எல்லோரும் எழுந்து நின்று கைகளில் மெழுகுவர்த்தியுடன் பெண்களுக்கெதிரான வன்முறையை ஒழிப்போம் என்ற பிரகடனத்தையும் செய்தார்கள். பெருமளவிலான பெண்கள் பல்வேறு இடங்களிலிருந்த வந்து கலந்து கொண்டனர். மாவட்டச் செயற்பாட்டுக்குழுவில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் உழைக்கும் மகளிர் அபிவிருத்திப் பிரிவு பெரும்பங்காற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பரந்தன் ரோட்டறிக் கழகத்துக்கு புதிய தலைவர் பதவியேற்பு

கிளிநொச்சி

பரந்தன் ரோட்டறிக் கழகத்தின் புதிய தலைவர் பதவியேற்பு நிகழ்வு அண்மையில் நியாப் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.



இந்த நிகழ்வில் மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து, அக வணக்கம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து வரவேற்புரையை ரோட்டேரியன் பொன்.நித்தியானந்தன் நிகழ்த்தினார். விருந்தினர்கள் அறிமுகம் நடைபெற்றது. தொடர்ந்து கழகத்தின் முன்னாள் தலைவர் உரையை அடுத்து புதிய தலைவர் பதவி யேற்பு நிகழ்வு நடைபெற்றது. கிளிநொச்சி, பரந்தன் ரோட்டறிக் கழக முன்னாள் தலைவர் ரோட்டேரியன் சு. தர்மரட்ணம், புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட ரோட்டேரியன் செ.சிவகுருநாதன் அவர்களுக்கு ரோட்டறிக் கழகத் தலைவருக்கான (2005-2006) பதக்கத்தை அணிவித்தார். அதனைத் தொடர்ந்து சர்வதேச ரோட்டறியின் 3220 ஆவது மாவட்ட ஆளுநர் புதிய தலைவருக்கான கௌரவிப்புப் பதக்கத்தை அணிவித்தார்.

முன்னாள் தலைவர், புதிய உறுப்பினர்கள், அடுத்த வருடத்துக்கான தெரிவுத் தலைவர் ஆகியோர் ஆளுநரால் ரோட்டறி இலச்சினை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர். புதிய அங்கத்தவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டனர். இந்த நிகழ்வில் கழகத்தின் புதிய தலைவர் உரையாற்றுகையில் -

கடந்த காலத்தில் ரோட்டறிக் கழகத்தின்சேவைகளை நினைவு கூர்ந்ததோடு, இனிவரும் காலத்தில் கழகத்தின் செயற்பாடுகள் நவீன மயப்படுத்தப்படும் எனக் கூறினார். தொடர்ந்து புதிய தலைவரை வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா வாழ்த்தினார். இந்த நிகழ்வின் நன்றியுரையை ரோட்டேரியன் வெ.குலேந்திரன் நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் கொழும்பிலிருந்து வருகை தந்த ரோட்டறிக் கழகத்தின் முக்கிய பிரமுகர்கள் சிலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.